விலை ரூபா: 15.00

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

Registered as a Newspaper in Srilanka






# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 17 சனிக்கிழமை (03.10.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 288

# குருநாகலில் குண்டு வெடிப்பு
# இருவர் பலி; 11 பேர் படுகாயம்

## நேற்றுக்காலை சம்பவம்

(கொழும்பு)

குருநாகல் பகுதியில் வான் ஒன்றில் நேற்றுக் காலை 7.15 மணியளவில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச்சம்பவத்தில் இருவர் உயிரிழந்தனர். 11 பேர் படுகாயமடைந்தனர். இச் சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. தனிப்பட்ட விரோதம் காரணமாகவே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாக அரசு கூறியுள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் தடுத்து வைப்பை அரசியல் ஆயுதமாக்கக் கூடாது
## இலங்கை வலியுறுத்தல்

(கொழும்பு)

வன்னி தடுப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்களை அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தக்கூடாது என ஐரோப்பிய ஒன்றியத்திடம் இலங்கை வலியுறுத்தி உள்ளது. ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் மனித உரிமைகளுக்கான துணைக்குழுவின் இலங்கை விவகாரம் குறித்த விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது. இரண்டு மணி நேரம் துணைக் (14ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் குற்றச்சாட்டுக்களை இலங்கை ஏற்றுக்கொண்டுள்ளது

(கொழும்பு)

வவுனியா முகாம்களில் உள்ள இடம் பெயர்ந்த மக்கள் பராமரிக்கப்படும் முறை தொடர்பாக ஐ.நா. சபையால் அண்மைக்காலத்தில் தெரிவிக்கப்படும் விமர்சனங்களில் பெரும்பாலானவற்றை தாம் ஏற்றுக்கொள்வதாக அரசு தெரிவித்திருக்கின்றது.

கடந்தவாரம் இலங்கைக்கு பயணத்தை மேற்கொண்டிருந்த ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி வோல்டர் கெலின் முன்வைத்துள்ள பரிந்துரைகளை அரசு நிறை வேற்றும் என இலங்கையின் மனித உரிமைகள் விவகார அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

முகாம்களில் உள்ளவர்களின் வசதிகளுக்காக உடனடியாகச் செய்யப்பட வேண்டிய பல நடவடிக்கைகள் தொடர்பாக வோல்டர் கெலின் தெரிவித்திருக்கின்றார் என்வும் அமைச்சர் சமரசிங்க ஏ.எஃப்.பி. செய்தி நிறுவனத்துக் குத் தெரிவித்தார்.

இது ஒரு (14ஆம் பக்கம் பார்க்க)

## தீவுப்பகுதியைச் சேர்ந்த 641 பேர் நேற்று அழைத்து வரப்பட்டனர்
## இன்று அவர்கள் மீள்குடியமர்த்தப்படுவர்

(வவுனியா)

வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவரப்பட்ட மக்கள் இன்று அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

வவுனியாவிலிருந்து நேற்று 203 குடும்பங்களைச் சேர்ந்த 641 பேர் நேற்று யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டனர்.

இவர்களில் காரைநகரைச் சேர்ந்த 29 குடும்பங்களைச் சேர்ந்த 89 பேரும் ஊர்காவற்றுறை பிரதேசத்தைச் சேர்ந்த 56 குடும்பங்களைச் சேர்ந்த 196 பேரும் காரைநகர் தோப்புக்காடு குடியேற்றத்திட்ட கிராமத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (14ஆம் பக்கம் பார்க்க)

## மேயர் பதவியேற்பு 12ஆம் திகதி கொழும்பில்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் கீழ் போட்டியிட்டு யாழ். மாநகர சபைக்கு தெரிவான மேயர், பிரதி மேயர் உட்பட யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் எதிர்வரும் 12ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டுக்கு இணங்க மேற்படி வைபவம் கொழும்பில் நடை பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ச-5)

## வீட்டில் மீளக்கற்றதன் மூலம் முதலிடத்தை பெற முடிந்தது
### வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி மாணவன் செவ்வி



(யாழ்ப்பாணம்)

பாடசாலையில் கற்பவற்றை தினமும் வீட்டில் மீளவும் கற்றதன் மூலமே புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தைபிடிக்க முடிந்ததாக யாழ்ப்பாணக்கல்லூரி மாணவன் லோகேஸ்வரன் ஸ்ரீகர்சன் தெரிவித்தார்.

தரம்-5 புலமைப்பரிசில் தமிழ்மொழி மூலமான பரீட்சையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மாணவன் லோகேஸ்வரன் ஸ்ரீகர்சன் 192 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியாக முதலாமிடத்தை பிடித்து யாழ்.மாவட்டத்திற்கு பெருமை சேர்த்தார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த லோகேஸ்வரன்-குருபாமா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் (14ஆம் பக்கம் பார்க்க)

## டில்லியிலுள்ள இலங். தூதரகம் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல்

(புதுடில்லி)

புதுடில்லியில் அமைந்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் மீது இனந்தெரியாதோரால் நேற்று தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்திய தலைநகர் புதுடில்லியில் இலங்கைத் தமிழர்களிற்கு ஆதரவு தெரிவித்தும் இலங்கை அரசிற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டமொன்றை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்களால் இலங்கைத் தூதரகம் தாக்கப்பட்டதாக இந்தியச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள இலட்சக்கணக்கான மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தக் கோரியும் இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை கண்டித்தும் புதிய தமிழகம், தௌபீ ஜமாத் மற்றும் ஜாதவமகாசபை (14ஆம் பக்கம் பார்க்க)

## 5ஆம் ஆண்டு புலமைபரிசில் பரீட்சை
## யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன் அகில இலங்கையில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவன் லோகேஸ்வரன் ஸ்ரீகர்சன் 192 புள்ளிகளைப் பெற்று தமிழ் மொழியில் அகில இலங்கையில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

தலியத்த சிற்றிநாலுவ றுகுணு விஜயபா வித்தியாலய மாணவன் ஜே.வி.ஏ.பிரேம தில்ஷான் 196 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி நடைபெற்ற 5ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகின. இப்பரீட்சையில் (14ஆம் பக்கம் பார்க்க)

இல்லத்தரசிகளுக்கு ஓர் இனிய நற்செய்தி!

ASP ENTERPRISES
முதன் முறையாக அறிமுகப்படுத்தும்

அனுகூலங்கள்
# குறைந்த நேரம்
# சிக்கன மின்சாரம்
# தீ,மின் அபாயமில்லை
# இலகுவாகக் கையாளலாம்
# ஒரு வருட உத்தரவாதம்
# இதற்குரிய சகல உதிரிப்பாகங்களையும் பெற்றுக் கொள்ளலாம்
# சர்வதேச தரச்சான்றிதழ் பெற்றது (ISO 9001 : 2000)

INDUCTION COOKER



யாழ் மண்ணில் புதியதோர் உதயம்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம்

கத்தோலிக்க அச்சக கடைத்தொகுதி
360/9, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்ரியன் சந்திக்கு அருகாமையில்)
தொலைபேசி - 0213001585, 0776079352

# போதியளவு நிதி இன்மையால் வீதி செப்பனிடும் பணி நிறுத்தம்

யாழ்.மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குட்பட்ட வீதிகளைத் தார் இட்டு செப்பனிடும் பணிகள் நிதியின்மை காரணமாக கைவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, யாழ். மாவட்டத்தில் வடக்கின் வசந்தம் 180 நாள் வேலைத் திட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குட்பட்ட வீதிகள் பெருந்தெருக்கள் அமைச்சினால் தார் இட்டு செப்பனிடப் படவிருந்தன.

இப் புனரமைப்புப் பணிக்கு 800 பரல்கள் தார் வேண்டும் என யாழ்.வீதி அபிவிருத்தி அதிகார சபை, பெருந்தெருக்கள் அமைச்சிடம் கோரியிருந்தது.

இந் நிலையில் பெருந்தெருக்கள் அமைச்சு தார் கொள்வனவு செய்வதற்குரிய நிதி தற்போது இல்லை என அறிவித்துள்ளது. இதனால் வடக்கின் வசந்தம் 180 நாள் வேலைத் திட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் யாழ்.மாவட்டத்தின் சபைக்குட்பட்ட வீதிகளுக்குத் தார் இட்டு செப்பனிடும் பணிகள் கைவிடப்பட்டது. (ச-5)

# தரைப்படையில் இருந்து தப்பியோடிய 20 ஆயிரம் பேருக்கு பொது மன்னிப்பு

(கொழும்பு)

தரைப்படையிலிருந்து தப்பியோடிய 20 ஆயிரத்து 220 பேருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

தப்பியோடியவர்களைப் படைகளிலிருந்து விடுவிக்கும் பணிகள் இறுதி நிலைக்கு வந்து விட்டன. கடந்த மே மாதத்தில் இந்தப் பணிகள் தொடங்கப்பட்டன. செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. அதேபோன்று கடற்படையிலிருந்து தப்பியோடியவர்களை விடுவிக்கும் பணிகள் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி தொடங்கப்பட்டு செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரையில் நடைபெற்றதாகக் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஆனால் தப்பியோடிய கடற்படையினருக்கு பொது மன்னிப்பு வழங்குவதற்கான கால அவகாசம் மேலும் ஒரு தடவை நீடிக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

ஏனெனில் கடற்படையிலிருந்து 6 ஆயிரம் பேர் தப்பியோடியுள்ளபோதும் இதுவரையில் 3 ஆயிரம் பேர் மட்டுமே சரணடைந்துள்ளனர் எனவும் எனவே இதுவரை சரணடையாதவர்களுக்கு மேலும் ஒரு வாய்ப்பு வழங்கப்படவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

வான் படையிலிருந்து தப்பியோடிய 3 ஆயிரம் பேருக்கும் பொது மன்னிப்பு வழங்கும் நடவடிக்கைகள் கடந்த ஓகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டன. அது தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.

இவ்வாறு தப்பியோடிய வான்படையினரில் பலர் கடன்களைப் பெற்றுள்ளார்கள் என்றும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு அவர்கள் விடுவிக்கப்படும்போது எந்தப் பற்றுக்களும் இருப்பதை வான்படை விரும்பவில்லை என்றும் வான்படைப் பேச்சாளர் ஜனக நாணயக்கார தெரிவித்தார். (ச-5)

# வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த தீவக மக்களை அமைச்சர் சந்தித்தார்



(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து மிருசுவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் குடும்பங்கள் மற்றும் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நலன்புரி நிலையத்தில் தொடர்ந்தும் வசிப்பதில் தாங்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் தங்களைத் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு அனுமதி பெற்றுத் தருமாறும் அமைச்சரிடம் இம் மக்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அவர்களது வேண்டுகோளைச் செவிமடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இரு மாத காலத்தில் அனைவரையும் சொந்த இடங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தெரிவித்ததுடன் 60 வயதிற்கு மேற்பட்டோரை ஒரு வார காலத்தில் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு ஏற்பாடு செய்வதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை ஏ-9 பாதை ஊடாக வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து 10ற்கு மேற்பட்ட பஸ்களில் அழைத்து வரப்பட்ட 600ற்கு மேற்பட்ட தீவுப் பகுதி மக்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்து கலந்துரையாடினார்.

கடந்த இரு தசாப்த கால போரின் வடுக்களைச் சிறந்த அனுபவங்களாகப் பெற்றுக் கொண்டு ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி நம்பிக்கையுடன் செல்ல வேண்டும் என இம் மக்களிடம் கேட்டுக்கொண்ட அமைச்சர், இம் மக்கள் பாதுகாப்பாகவும் நிம்மதியாகவும் வாழ்க்கையைத் தொடர முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். (ச-5)

# வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்தினால் பரீட்சையில் இலகுவாகச் சித்தி பெறலாம்

## யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

பாடசாலையில் இருக்கும் வசதிகள் வாய்ப்புகளை சரிவரப் பயன்படுத்தி கல்வி கற்கும் மாணவர்கள் பரீட்சையில் இலகுவாக சித்தி பெறுவார்கள்.

இவ்வாறு செல்வன் லோகேஸ்வரன் ஸ்ரீகர்சன் புலமைப்பரிசில் பரீட்சையில் 192 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார் என வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர் நோயல் ஏ.விமலேந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன் லோகேஸ்வரன் ஸ்ரீகர்சன் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தைப் பெற்று தமது கல்லூரிக்கு பெருமை சேர்த்தமை தொடர்பில் முதல்வர் நோயல் ஏ.விமலேந்திரன் மேலும் தெரிவிக்கையில்,

மாணவன் ஒருவன் சிறப்பான புள்ளிகளைப் பெற்று சித்தியடைகிறான் எனில் அதில் ஒரு முக்கியமான விடயத்தை தெரிந்து கொள்ள வேண்டும்.

அம் மாணவன் தான் கல்வி கற்கும் பாடசாலையில் இருக்கும் வாய்ப்புகளைச் சரி



வரப் பயன்படுத்துகின்றான் என்பது புலப்படும்.

அதேபோன்று செல்வன் லோகேஸ்வரன் ஸ்ரீகர்சன் எமது பாடசாலையில் கிடைத்த வாய்ப்புகளைச் சரிவரப் பயன்படுத்தி சிறந்த புள்ளியைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

இவ்வாறு பாரம்பரிய பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்கள் சிறந்த புள்ளிகளைப் பெறும் போதுதான் பிரபல்யமான பாட சாலைகளும் புரிந்து கொள்ளும்.

அத்துடன் தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் இவ்வாறு மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ளும் போதுதான் எமது கல்லூரி போன்ற பாரம்பரிய பாடசாலையில் கல்வி வாய்ப்புகள் இருப்பது வெளி வரும்.

பெரும்பாலான மாணவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று விட்டு உயர்தரத்தில் சாதிப்பதில்லை. அதற்குக் காரணம் புலமைப் பரிசில் பரீட்சையை இலக்கு வைத்துக் கல்வி பயில்வதும் ஏனைய பாடங்களில் அக்கறையின்மையாக இருப்பதும்தான்.

ஆனால் லோகேஸ்வரன் ஸ்ரீகர்சன் புலமைப் பரிசில் பரீட்சையில் மாத்திரமில்லை ஏனைய கல்வித் திட்டங்களிலும் சிறந்து விளங்குவதால் சிறப்பான எதிர் காலம் உண்டு என யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர் நோயல் ஏ.விமலேந்திரன் குறிப்பிட்டார். (ச-5)

# கதை சொல்லல் இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

"கதை கதையாம்..." கதை சொல்லல் இறுதிச் சுற்றுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.55 மணியிலிருந்து ஒரு மணிவரை யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து கொள்கிறார். (ச-5)

# 'நிலாக் காலம்' கலை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி மகாஜனசபை கலைஞர் வட்டத்தினர் மாதாந்தம் பூரணை தினத்தன்று நடத்தும் "நிலாக்காலம்" கலை நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு மகாஜனசபை திருமண மண்டபத்தில் மகாஜனசபைத் தலைவர் வை.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

கலை நிகழ்வுகளில் இன்னிசைக்கச்சேரி, சிறுவர் நாடகம், நடன நிகழ்வுகள், வில்லுப்பாட்டு, நாடகம் என்பன நடைபெறவுள்ளன. (ச-14)


## பிரிவுத் துயர் பகிர்கின்றோம்



யாழ்.உரும்பிராய் இந்துக் கல்லூரியின் ஆசிரியர்
திரு.சி.சிவகுமாரனின்
பாசமிகு தந்தை

திரு. சின்னையா
சிவபாதசுந்தரம்

அவர்கள் 01.10.2009 அன்று சிவபதம் அடைந்ததால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யாழ்.உரும்பிராய் இந்துக் கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(C-3438)

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பரிசுத் தினம் - 2009

இடம் : குமாரசுவாமி மண்டபம்
காலம் : 05.10.2009 திங்கட்கிழமை
நேரம் : காலை 9.45 மணி
தலைவர்: திரு. வீ. கணேசராசா (அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)
பிரதம விருந்தினர்: மாண்புமிகு ஜெரிமையா விஸ்வநாதன் (உயர் நீதிமன்ற நீதிபதி, வடமாகாணம், பழைய மாணவர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)
பரிசில் வழங்கல்: திருமதி இரஞ்சி விஸ்வநாதன் (சட்டத்தரணி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.
(C-3440)

## MIS கணனிக்கல்வி நிறுவனம்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma in Graphics Design & DTP
Diploma in Java Programming
Diploma in Visual Basic Programming
Diploma in Ms-Office
Diploma in Hardware Technology
Diploma in Linux Fundamentals
Diploma in Web Designing

குறைந்த கட்டணம்

Mr.R.Kumaran - B.Sc. (Computing & IS)

இராமநாதன் வீதியிலிருந்து 150m தூரம் அல்லது K.K.S வீதியிலிருந்து 200m தூரம்
# 74, சபாபதி வீதி தலையாழி பிரம்படி யாழ்ப்பாணம்

TPNO :- 0213216083 . 0776577359

## காணி விற்பனைக்கு

கண்டி வீதி ஏ-9 வீதியின் கிழக்கு பக்கமாகவும் கைதடி நாவற்குழி ஒழுங்கையின் வடக்கு பக்கமாகவும், கைதடி முதியோர் இல்லத்தின் எதிர்புறமாகவும் 18 1/ 2 பரப்பு "கோணாறி பிட்டி" காணி விற்பனைக்கு உண்டு. ஒருமித்தும் அல்லது 4 துண்டுகளாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

விபரங்களுக்கு: சீ. அருணகிரிநாதன், G.P.S, ஒழுங்கை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம் : 0776924182 உடன் தொடர்பு கொள்ளவும். (3702)

# இடம்பெயர்ந்த மக்களுக்காக நன்கொடை நாடுகள் 196 மில்லியன் டொலர் மனிதநேய உதவி

(கொழும்பு)

வட பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த சுமார் 3 இலட்சம் மக்களுக்கான மனிதநேய உதவிகளாக ஏறத்தாழ 196 மில்லியன் அமெரிக்க டொலரை நன்கொடை நாடுகள் வழங்கியுள்ளன.

இந்த தொகையில் பொது மனிதநேய செயற்றிட்டத்தில் விவரிக்கப்பட்ட திட்டங்களுக்கென 155 மில்லியன் அமெரிக்க டொலரும் இத்திட்டத்திற்கு வெளியே மேற்கொள்ளப்படும் மனிதநேய பணிகளுக்கென மிகுதிப் பணமும் செலவிடப்படும்.

வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் காணி சுத்திகரித்தல், வடிகாலமைப்பு, மின்விநியோகம், நீர் விநியோகம் போன்றவற்றுக்கு அரசாங்கம் செலவிட்ட தொகை இதிலிருந்து ஈடு செய்யப்படும்.

இன்னமும் முகாம்களில் இருந்து வரும் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் இடம்பெயர்ந்த மக்களில் அநேகமானோரை அவர்களது சொந்த வீடுகளில் குடியமர்த்துவதற்கு அல்லது பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பிப்பதற்கு முன்னர் முகாம்களில் இட நெருக்கடியை குறைப்பதற்காக மாற்று இடங்களுக்கு அவர்களை அழைத்துச் செல்வதற்கு அரசாங்கம் முயற்சி மேற்கொண்டு வருகிறது என்று அனர்த்த முகாமைத்துவ மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இந்த நடைமுறைகளுக்கு உதவியாக நன்கொடை நாடுகள் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கும் சொந்த இடங்களுக்கு திரும்பும் குடும்பங்கள் அவற்றின் வீடுகளை திருத்தியமைப்பதற்கும் உணவு மற்றும் அத்தி யாவசிய பொருட்களை கொள்வனவு செய்வ தற்கும் தாராள மனது கொண்டு நிதிகளை வழங்கியுள்ளன.

2010 ஆம் ஆண்டில் சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கும் நிவாரணப் பொருட்களை வழங்குவதற்குமான தேவைகளை இனம் காணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்த மக்களை 2010 ஆம் ஆண்டில் அவர்களது சொந்த வீடுகளில் குடியமர்த்துவது என்ற அரசாங்கத்தின் உறுதி மொழியை வரவேற்பதாக தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் வதிவிட, மனிதநேய ஒருங் கிணைப்பாளர் நில் புஹுனே, இத்துடன் மனித நேய உதவி வழங்கல் முற்றுப் பெற்று விடும் என்று கருதமுடியாதென தெரிவித்தார்.

சகல குடும்பங்களும் அவற்றின் வீடுகளுக்கு திரும்பி சுமுக வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிப்பதை உறுதிப்படுத்த அவர்களுக்கு தொடர்ச்சியான உதவி தேவைப்படும் என்று அவர் கூறினார்.

முகாம் வாசிகள் தொகை குறிப்பிடத்தக்க அளவு குறைந்துவிடுமென எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், சில குடும்பங்கள் 2010 ஆம் ஆண்டின் முதல் சில மாதங்களுக்கு முகாம்களிலேயே தொடர்ந்தும் இருக்க விரும்பக் கூடும் என்றும் புஹுனே தெரிவித்தார்.

பொது மனிதநேய செயற்றிட்டத்தின் மூலம் அரசாங்க திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவதை உறுதிப்படுத்த ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும் இதன் பங்கு நிறுவனங்களும் முக்கிய அமைச்சுக்களுடன் ஆலோசனை நடத்தியிருக்கின்றன. (ஓ-6)

## மலேசியாவில் கடத்தப்பட்ட கொழும்பு வர்த்தகரின் புதல்வர் விடுவிப்பு

மலேசியாவில் கடத்தப்பட்ட கொழும்பு வர்த்தகர் ஒருவரின் புதல்வர் கப்பம் செலுத்தப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தமிழ் குழுவொன்றினாலேயே குறித்த வர்த்தகரின் மகன் கடத்தப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் மூன்று மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்தப்பட்டதன் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

## அமைச்சுக்கான செயலரை ஜனாதிபதியே நியமிப்பார்

(கொழும்பு)

ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சுக்கான செயலாளர் ரனுகே ஓய்வு பெறுவதற்கு தீர்மானித்துள்ளார் என்று தெரிவித்த அவ் அமைச்சின் அமைச்சரான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அமைச்சுக்கான செயலாளரை ஜனாதிபதியே நியமிப்பார் என்று தெரிவித்துள்ளார். (ஓ-6)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### சசிகுமார் சாலுஜன்



(யா/ ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய - மாணவன்)

5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 146 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ள சசிகுமார் சாலுஜனை பாராட்டி மகிழ்வதோடு அவர் மென்மேலும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்

அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமன், மாமி

39, அரசடி வீதி,
நல்லூர். (3723)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாகித்திய ரத்தினா விருது பெற்ற எமது கழக ஆரம்ப காலத் தலைவரும் தற்போதைய நிர்வாக சபை உறுப்பினருமாகிய மூத்த எழுத்தாளர்

**செங்கை ஆழியான்**

**கலாநிதி லயன் கே.குணராசா**


அவர்கட்கு இவ் விருது கிடைத்தமைக்காக பாராட்டி வாழ்த்துகிறோம்.

(3721)


**திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகம்**


## இன்று துன்னாலை வல்லிபுர தீர்த்தோற்சவம்

### வங்கக் கடலில் தீர்த்தமாடுவோம்




மருதமும் நெய்தலும் மயங்கியே கவின் தரும்
பெரு நிலப் பரப்பாம் வல்லி புரந்தனில்
அமைந்ததோர் ஆலய மதனிலே நடைபெறும்
பெருவிழா பதினேழின் இறுதியாம் இருநாளில்
தீர்த்தங்கள் இருவகை நிகழ்வதோர் சிறப்பாம்
வங்காள விரிகுடா பெருஞ்சமுத் திரமதில்
கரையிலே அமைந்த தீர்த்தக் கரைதனில்
சமுத்திர தீர்த்த விழாவெகு சிறப்புடன்
புரட்டாதிப் பூரணை தினத்திலே நிகழும்
ஆலயமிருந்து இருகல் தொலைவினில்
அமைந்த தீர்த்தக் கரைதனை நோக்கியே
வாகனம் மூன்றில் சுவாமியைச் சுமந்தே
வேகமாய்ச் சென்று கரைதனை அடைவர்
அழகிய ஓடம் ஒன்றிலே சுவாமியும்
குருக்களும் மேளக் கோஷ்டியும் நீச்சல்
வீரர்கள் சிலரும் ஏறியே செல்வர்
கரைதனில் இருந்து சிலபாக தூரம்
சென்றபின் தீர்த்த நிகழ்வுகள் தொட்ரும்
கடலிலே தீர்த்தக் கிரியைகள் நிறைவுறும்
தீர்த்தக் கரையில் ஆலயந் தன்னில்
தீபாராதனை அர்ச்சனை நிறைவுறும்
பரந்து விரிந்த மணற்பரப் பதனிலே
காவிரிப்பட்டினக் கடற்கரை போலவே
அல்லங்காடிகள் பலபல காணலாம்
சிலம்பு கூறும் இந்திர விழாவினை
பூரணை நிலவில் கண்டு களித்தபின்
சுவாமியும் அடியவர் கூட்டம் தொடர
ஆலயந் தன்னை சென்று அடைவாரே



**கவிமணி கந்தமுருகேச தாசனார்.**


### போற்றித் துதிப்போம் கண்ணன் தாளையே



சங்கு சக்கரம் உன்தன் கையிலே
சகல உயிர்களைக் காப்பதுன் கையிலே
அங்கு சொன்ன கீதை மொழிகளே
ஆதா ரமாகும் என்றும் வாழ்விலே
எங்கும் மாயவா உன்தன் லீலையே
ஏறி வருவாய் வீதியுன் தேரிலே
பொங்கும் மங்களம் எங்கும் பொங்கவே
போற்றித் துதிப்போம் கண்ணன் தாளையே

***சிவபுரக் கவிராயர்***

### வல்லிபுரக்கோவில் தீர்த்தத் திருவிழாவிற்கு வல்லிபுரத் தண்ணலே வரந்தருவாய்



வல்லிபுரம் வாழுமெங்கள்
வாகீசனே கண்ணா !
நல்லிதயம் நிறைத்துன்னை
நம்பி வந்தோம் கண்ணா!
எல்லகரும் நலம் பெறவே
அருள்புரிவாய் கண்ணா!
நல்லபதி வல்லிபுரம்
வாழுமெங்கள் மன்னா !
நீலக்கடல் நீராடப்
போகுமெங்கள் கண்ணா!
ஞாலமதில் நல்லவைகள்
நிறைந்திடுவாய் கண்ணா!
காலமெல்லாம் கலங்கி நிற்கும்
எங்கள் உறவெல்லாம்
சீலமுடன் வாழ்ந்திடவே
வரந்தருவாய் கண்ணா!

**சி.மார்க்கண்டு , தும்பளை தெற்கு**

## பொது அறிவுப் போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால் பதிவு செய்யப்பட்டுள்ள அற நெறிப் பாடசாலை மாணவர்களுக்கான இந்துசமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை நடை பெறவுள்ளது.

இப் பரீட்சையில் பாலர் பிரிவு காலை 9 மணிமுதல் 10 மணிவரையும், கீழ்ப்பிரிவு காலை 10.30 மணிமுதல் 11.30 மணிவரை யும், மத்திய பிரிவு பிற்பகல் 12 மணி முதல் 1.30 மணிவரையும், மேற்பிரிவு பிற்பகல் 2 மணி முதல் 3.30 மணிவரையும் நடை பெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்றவுள்ள மாணவர் கள் இப்பரீட்சைக்கான நிலையம் மற்றும் சுட்டிலக்கங்களை தாங்கள் விண்ணப்பித்த அறநெறிப் பாடசாலையில் பெற்றுக்கொள் ளலாம் என திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-4-18)

## திருத்தாண்டகம் முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றம் நாட்டு மக்கள் நலம் வேண்டி பிரார்த்தித்து ஆலயங்கள் தோறும் நாயன்மார் நால்வர் பெருமக்களை எழுந்தருளச் செய்து பன்னிரு திருமுறை முழுவதும் முற்றோதி வருகின்றனர்.

கடந்த மாதம் 17 ஆம் திகதி முதல் எதிர் வரும் 17 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் வண் மேற்கு ஸ்ரீ அங்குசபாச கீரிப்பிள்ளை யார் தேவஸ்தானத்தில் ஆறாந் திருமுறை திருத்தாண்டகம் முற்றோதல் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## மீட்டல் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வலய பாடசாலைகளில் தரம் 9, 10, 11 இல் கல்வி கற்கும் மாணவர்களுக் கான விரைவு மீட்டல் பரீட்சை நாளை மறு தினம் திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளதாக தென்மராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ-4-29)

## சிறப்பு விரிவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் ஏற் பாட்டில் நடைபெற்றுவரும் சிறப்பு விரிவுரைத் தொடரில் எதிர்வரும் 7 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை மனைப்பொருளியல் உயர்தர ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான "மனைப்பொருளியல் புதிய பாடத் திட்டமும் கற்பித்தல் நுட்பமுறையும்" எனும் தலைப்பி லான விரிவுரை யாழ்.பல்கலைக்கழக பொரு ளியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள் ளது.

இவ் விரிவுரையை யாழ்.பல்கலைக்கழ மனைப்பொருளியல் விரிவுரையாளர் செல்வி ப.குலராஜசிங்கம் நிகழ்த்தவுள்ளார். (ஓ-6)

# சைவ பரிபாலன சபையின் சைவநெறித் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா

சைவ பரிபாலன சபையினால், 2008 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வில் வெற்றியீட்டிய மாண வர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவ பரி பாலனசபைத் தலைவர் த.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் செ.சேதுராஜா கலந்து சிறப்பிப்பதுடன் திருமதி கௌரி சேதுராஜா வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கவுள் ளார்.

மேலும் "கல்வியில் செல் நெறி" எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக கல்வியியற் றுறைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி சிறப்பு ரையாற்றவுள்ளார்.

மேலும் இத் தேர்வில் முதல் மூன்று இடங் களைப் பெற்று பரிசில்கள் பெறவுள்ள தரம் - 2 மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

கி.கிருஷ்ணமதி ,பா.பானதி, மு.பத்மபிரியா -மாதனை மெ.மி.த.க.பாடசாலை, ஐ.நிரோ ஷன் - அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாட சாலை, ச.அங்கவன் -மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை, வி.தாரகா, ஜீ.சப்தாமுகி, ப.கிஷாஜினி -கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை,

ஜெ.தருஷன்- மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாசாலை, அ.அபிசாந் - நல்லூர் சென்பெனடிக்ற் றோ.க.த.க. பாட சாலை, ஸ்ரீ.தரணிசன் -அருணோதயாக் கல்லூரி, நா.பிரவீணா - மகாஜனாக் கல்லூரி, ர.வுசைன் -சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

உ.பபிதா -தாவடி இ.த.க.பாடசாலை, வி.பிரணவி,உதர்மிலன் -மட்டுவில் கமலா சனி வித்தியாலயம், அ.லகுலன், சி.விதுர் சன்- கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்.

ர.ஆர்த்திகா - பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, இ.துஷாரகன் - பரு. சித்திவிநாயகர் வித்தியாலயம், இ.தர்சினி - வல்வெட்டித்துறை அ.மி.த.க. பாடசாலை, க.கேனுகா -அராலி சரஸ்வதி மகா வித்தியா லயம்,பா.சிவராஜினி - கலாநிதி ஆ.தியாக ராசா மத்திய மகாவித்தியாலயம், த.கிருஷானி -கைதடி கலைவாணி வித்தியாலயம். (ஓ-9-4)

# திருமறைக் கலாமன்றம் நடத்தும் கலை நிலா அரங்கு நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமுறைக் கலாமன்றத்தால் மாதாந்தம் நடத்தப்பட்டு வருகின்ற கலை நிலா அரங்கு நிகழ்வுகளின் செப்ரெம்பர் மாதத்துக்கான கலைநிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு 286, பிரதானவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத் தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்களின் நடனங்கள், ஓர்கன் இசை ஆகியவற்றுடன் கலைத்தூது அழகி யல் கல்லூரியின் வீணை, ஆசிரியர் திருமதி. சுந்தரேஸ்வரி ஜெயக்குமார் குழுவினரின் வாத்தியப் பிருந்தாவும், நிறைவு நிகழ்வாக யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை மாணவிகளின் "பாரிபடுகளம்" என்னும் தென்மோடி நாட்டுக்கூத்தும் இடம்பெறும்.

இந்நிகழ்வுக்கு கலைத்தூது அழகியல் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் சார்பாக அன்ரன் குலசேகரம் தம்பதியினரும் டிலிப் ரஞ்சன் தம்பதியினரும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்க வுள்ளனர். (ஓ)

## முதியோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு கைதடி அரச முதியோர் இல்லம் நடத்தும் முதியோர்தினவிழாவின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் இல்ல அத்தியட்சகர் என். இராச லிங்கம் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத் தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந் தினர்களாக கைதடி தெற்கு கிராம உத்தியோ கத்தர் எஸ்.ரவீந்திரன், யாழ் போதனா வைத் தியசாலை உளநல மருத்துவர் டாக்டர். திருமதி. தயாபரணி பாரதிதாசன், இளைப்பாறிய சமூகசேவை உத்தியோகத்தர் எம்.தர்மலிங் கம், கைதடி ப.நோ.கூ.சங்கத் தலைவர் என். சிவதிரு.செந்தில்நாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். தொடர்ந்து கலை நிகழ்ச் சிகள் இடம்பெறவுள்ளன. (ஓ)

## தரம் 10 மாணவர்களுக்கான கணித பாட முகாம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களில் தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவர் களுக்கான செயற்பாட்டுடனான கணித பாட முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு பின்வரும் பாடசாலைகளில் ஆரம் பமாகி நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச் சேரி மகளிர் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலம், வரணி மகாவித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசுவாமி, கச்சாய் அ.த.க.பாடசாலை, மட்டுவில் சந்திரபுர ஸ்கந் தவரோதய மகா வித்தியாலயம், மட்டுவில் கமலாசினி மகாவித்தியாலயம் ஆகிய பாட சாலைகளுக்கு அருகில் உள்ள மாணவர் களை வகுப்பு பொறுப்பாசிரியர்கள் அழைத் துச் செல்லுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள் ளார். (ஓ-4-29)

## கடவுள் சுவாமிகளின் குருபூஜை

(யாழ்ப்பாணம்)

செல்வச்சந்நிதி தகர மடத்தில் இருந்து அருளாசி வழங்கி வந்த அருள்மிகு கடவுள் சுவாமிகளின் (மௌனகுரு சுவாமிகள் - முருகுப்பிள்ளை சுவாமிகள்) குருபூசை இன்று சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை அவருடைய சமாதி அமைந்துள்ள மறவன்புலோ சமாதியில் கடவுள் சுவாமிகளின் அன்பர்கள், அடியவர் களால் கொண்டாடப்படவுள்ளது.

இதில் கடவுள் சுவாமிகளின் அடியார்கள், அன்பர்கள் யாவரும் கலந்து சுவாமிகளின் அருளாசிகளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-6)

## கௌரி காப்பு நூல் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

கேதார கௌரி விரதம் அனுஷ்டிக்கும் அடியார்களுக்கான " கௌரி காப்பு நூல்" யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதியில் உள்ள மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தால் அன்பளிப்பாக வழங்கப்படுகின்றது.

இந்நூலைப் பெற்றுக்கொள்ள விரும்பும் அடியார்கள் தொழிலகத்திற்கு நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு சிவநேயர் இ.தவகோ பால் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-6)




## பஸ் தாமதமானதால் பாடசாலை மாணவர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவனிலிருந்து காலை 7.15க்கு புறப்படும் 764 இலக்க பாடசாலை சேவை பஸ் நேற்றுக்காலை 8மணிக்கே பஸ் தரிப்பிடத்திற்கு வந்து சேர்ந்தமையால் பாடசாலை மாணவர்கள் காத்திருந்து ஏமாற் றத்துடன் பாடசாலைக்கு செல்லமுடியாது திரும் பிச் சென்றதாக பாதிக்கப்பட்ட மாணவர்க ளின் பெற்றோர்கள் கவலை தெரிவித்துள் ளனர்.

அத்துடன் இது தொடர்பாக புதிய அதிகாரி கள் கவனம் எடுத்து பாடசாலை மாணவர்கள் உரிய நேரத்திற்கு பாடசாலை செல்ல உதவு மாறும் கேட்டுக்கொள்கின்றனர். (ஓ-4)

## தரவட்ட செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட் பட்ட பாடசாலைகளில் தரம் 6 முதல் 11 வரை தமிழ் மொழியும் இலக்கியமும் கற்பிக்கும் ஆசிரி யர்களுக்கான தரவட்டச் செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை 8மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடை பெறும் என தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள் ளார். (ஓ-4-29)






கைதடி நவீல்ட் பாடசாலையும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து நடத்திய இறுவட்டு, பிறைல் நூல் வெளியீட்டு நிகழ்வில் தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர் பாலசிங்கம் மதனரூபன் பிரதம விருந்தினரான தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதையும், பிரதம விருந்தினரிடமிருந்து தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் ஆர்.ராஜமகேந்திரசிங்கம் இறுவட்டை பெற்றுக்கொள்வதையும், உபபீடாதிபதி திருமதி எஸ்.சிவபாதம் பிறைல் நூல் பிரதியைப் பெற்றுக்கொள்வதையும், விருந்தினர்களான திருமதி கி.டேவிட், உப பீடாதிபதி செல்வி நி.நல்லையா, விரிவுரையாளர் ஆ.ரவீந்திரன், த.வரதராஜா, வணக்கத்துக்குரிய எஸ்.பி.நேசகுமார் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## இன்று ஒரு தகவல்

# தசரதனும்* கைகேயியும்*

"உங்கள் மீது எனக்கு அளவு கடந்த அன்பு" என்று யாராவது கூறினால் அதை அலட்சியமாக நினைத்து விடக்கூடாது. அது கொஞ்சம் "சீரியஸ்" ஆன விடயம்.

அளவுக்கு மிஞ்சினால் எதுவுமே இடைஞ்சல் தான். அன்பும் அப்படித்தான்.

அதிகமாக அன்பு வைத்தால் அது எப்படி கெடுதலாகும்? என்ற சந்தேகம் உங்களுக்கு வரலாம்.

தசரதன் கதை என்னவாயிற்று?

கைகேயி மீது தசரதன் கொண்டிருந்த அன்பு... இராமனைக் காட்டுக்குப் போகுமாறு செய்தது.

தசரதன் எப்படிப்பட்ட அரசன்? கம்ப இராமாயணத்தில் விசுவாமித்திரர் கூறுகிறார்.

"என்னைப் போன்ற முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் ஏதாவது கஷ்டம் வந்தால், முதலில் முருகனிடம் போவோம். அதற்குப்பின் பரமசிவனைப் பார்ப்போம். பின் திருமாலிடம் செல்வோம். அதற்குப் பின் பிரமன், இந்திரன் ஆகியவர்களைச் சென்று பார்ப்போம்.

இவர்கள் அனைவராலும் எங்களுக்கு உதவி செய்ய முடியாவிட்டால் அயோத்திக்கு வருவோம். உன்னை விட்டால் எங்களுக்கு வேறு கதி உண்டோ?" என்று தசரதனைப் பார்த்து விசுவாமித்திரே கூறுகிறார்.

அத்தகைய சிறப்பு வாய்ந்த தசரதன் கைகேயியின் காலில் வந்து விழுந்து வணங்குகிறான். "உன் பாதங்களைத் தொட்டு கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இராமனைக் காட்டுக்கு அனுப்பாதே!" என்கிறான்.

தசரதனது இந்த அவல நிலைமைக்கு என்ன காரணம்? அவன் கைகேயி மீது வைத்திருந்த அளவு கடந்த அன்புதான் காரணம்.

இப்பொழுது சொல்லுங்கள் ; அன்பாக இருந்தாலும் அது அளவுக்கு மீறிப் போனால் கெடுதல் செய்யுமா... செய்யாதா? அது மட்டுமல்ல...

அளவு கடந்த அன்பு நீதிக்கும், நியாயத்திற்கும் புறம்பான காரியங்களையும் செய்யும் நிலைக்கு ஒருவனை ஆளாக்கிவிடும்.

தசரதன் சிறந்த நீதிமான். தர்மத்திற்கு விரோதமாக ஒரு காரியமும் செய்யாதவன். அத்தகையவன் தன் மனைவியைப் பார்த்து என்ன சொல்கிறான் தெரியுமா?

"உனக்காக நான் என்ன செய்ய வேண்டும், சொல் செய்கிறேன், ஒரு குற்றமும் செய்யாத ஒருவனைக் கொல்ல வேண்டுமா? கொல்கிறேன். மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவனை விடுதலை செய்யச் சொல்கிறாயா... செய்கிறேன். எந்தப் பிச்சைக்காரனையாவது கோடீஸ்வரனாக்க சொல்கிறாயா... ஆக்குகிறேன். அல்லது கோடீஸ்வரனை பிச்சைக்காரன் ஆக்க வேண்டுமா..." என்று கூறுகிறான்.

நீதிக்கு விரோதமான இந்தப் பாவங்களைச் செய்வதற்கு அப்படிப்பட்ட அரசன் எப்படித் துணிந்தான்? மனைவி மீது அளவு கடந்த அன்பு வைத்தது தான் காரணம்.

அப்பா, அம்மா, மனைவி, மக்கள் ஆகிய அனைவரிடமும் அன்பு அவசியம் இருக்க வேண்டும் தான். ஆனால் அந்த அன்பு அறிவுக்குப் புறம்பாக இருந்து விடக் கூடாது. அளவுக்கு மீறியும் இருக்கக் கூடாது.

அப்போதுதான் வாழ்க்கை சுகமானதாக இருக்கும். இல்லாவிட்டால் அவஸ்தை தான்!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடமராட்சி கல்வி வலய ஆசிரியர்களிடையே நடத்தப்பட்ட போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் துரித கல்வி முன்னேற்ற செயற்திட்டத்ததின் கீழ் வடமராட்சி கல்வி வலய ஆசிரியர்களுக்கிடையே நடத்தப்பட்ட எழுத்தாக்கம் மற்றும் விளையாட்டுப் போட்டி முடிபுகள் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு,

**எழுத்தாக்கப் போட்டிகள்**

**கட்டுரை - தமிழ்**

ந. கிருஸ்ணகுமார் (கரணவாய் மகா வித்தியாலயம்), செல்வி. வி. தங்க வேலாயுதம் (மெதடிஸ் பெண்கள் உ. பாடசாலை), த. விஜயகுமார் (சிதம்பராக் கல்லூரி).

**கட்டுரை - ஆங்கிலம்**

இ. பிரபோசங்கர் (விக்னேஸ்வராக் கல்லூரி), திருமதி. ச. நின்மதி ராசா (வட இந்து மகளிர் கல்லூரி), க. உதயசீலன் (நெல்லியடி ம.ம. வித்தி.

**கவிதை - தமிழ்**

வே. நந்தகுமார் (தேவரையாளி இ. கல்லூரி),வே. அகிலன் (கொற்றாவத்தை அ.மி.த.க. பா),அ. பௌநந்தி (விக்னேஸ்வராக் கல்லூரி).

**கவிதை - ஆங்கிலம்**

திருமதி. ப. கலைச்செல்வன் (விக்னேஸ்வராக் கல்லூரி), சு. மகாகணபதி (கரணவாய் மகா வித்தி.

**ஓவியப் போட்டி**

பா. அரியதாஸ் (நெல்லியடி ம.ம. வித்தி.

**விளையாட்டு - ஆண்கள்**

**100 மீற்றர் ஓட்டம்**

சி. ஸ்ரீதரன் (துன்னாலை தெற்கு அ.த.கல்லூரி), சி. மதுசூதனன் (நெல்லியடி ம.ம. வித்தியாலயம்), க. கனகராசா (பொலிகண்டி இ.த. கல்லூரி).

**200 மீற்றர் ஓட்டம்**

சி. மதுசூதனன் (நெல்லியடி ம.ம. வித்தியாலயம்), ப. பார்த்தீபன் (புற்றளை மகா வித்தியாலயம்), பூ. நகுலன் (தேவரையாளி இ. கல்லூரி).

**400 மீற்றர் ஓட்டம்**

ச. சுலேந்திரன் (கரணவாய் மகா வித்தியாலயம்), ப. பார்த்தீபன் (புற்றளை மகா வித்தியாலயம்), ம. சந்திரமோகன் (கம்பர்மலை மகா வித்தியாலயம்).

**1500 மீற்றர் ஓட்டம்**

நா. விஜயகுமார் (நெல்லியடி ம.ம. வித்தியாலயம்), ம. சந்திரமோகன் (கம்பர்மலை மகா வித்தியாலயம்), யோ. விதுவாகரன் (வட இந்து மகளிர் கல்லூரி).

**நீளம் பாய்தல்**

சி. ஸ்ரீதரன் (துன்னாலை தெற்கு அ.த.கல்லூரி), சிறிகாந்தராசா (மணற்காடு றோ.க.த. பாடசாலை), செ. ஞானச் செல்வன் (நெல்லியடி ம.ம. வித்தி.

**முப்பாய்ச்சல்**

பா. சசிகரன் (தொண்டைமானாறு வீரக்தி ம. வித்தி), ச. சுவேந்திரன் (கரணவாய் மகா வித்தி), ச. சாள்ஸ் இன்பதாஸ் (கலட்டி றோ.க.த. பாடசாலை).

**குண்டு எறிதல்**

ச. செல்வக்குமரன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), சி. செல்வரதன் (மணற்காடு றோ.க.த. பாடசாலை),த. ரமேஸ்வரன் (கொற்றாவத்தை அ.த.க. பாடசாலை).

**தட்டெறிதல்**

சி. செல்வரதன் (மணற்காடு றோ.க.த.பாடசாலை), ச. சாள்ஸ் இன்பதாஸ் (கலட்டி றோ.க.த. பாடசால), சி. விமலன் (அல்வாய் வடக்கு றோ.க.த.)

**உயரம் பாய்தல்**

பா. சசிகரன் (தொண்டைமானாறு வீரகத்தி ம. வித்தி), த. ரஜனிகாந் (நெல்லியடி ம.ம. வித்தி), மூன்றாமிடம் இருவர் - செ. ஞானச்செல்வன், நா. விஜயகுமார் (நெல்லியடி ம.ம. வித்தி.

**விளையாட்டு பெண்கள்**

**100 மீற்றர் ஓட்டம்**

செல்வி. ப. கயந்தினி, திருமதி. மகா கேதீஸ்வரன் (கட்டைவேலி மெ.மி.சு.க.பா), செல்வி சூ. யாழினி (நெல்லியடி ம.ம. வித்தி).

**200 மீற்றர் ஓட்டம்**

செல்வி அ. நிஷாந்தினி (நெல்லியடி ம.ம. வித்தி), செல்வி சி. செல்வரஞ்சினி (கரணவாய் மகா வித்தி, செல்வி. இ. வனிதா (பொலிகண்டி இ.த.கல்லூரி).

**400 மீற்றர் ஓட்டம்**

செல்வி. அ. நிஷாந்தினி (நெல்லியடி ம.ம. வித்தி, செல்வி சி. செல்வரஞ்சினி (கரணவாய் மகா வித்தி, செல்வி. ஸ். ராஜினி (நெல்லியடி ம.ம. வித்தி.

**நீளம் பாய்தல்**

செல்வி சு. மலர்விழி (பொலிகண்டி இ.த.கல்லூரி), செல்வி. வாசுகி (நெல்லியடி ம.ம.வித்தி), திருமதி. மகாகேதீஸ்வரன் (கட்டைவேலி மெ.மி.த.க.பா),

**முப்பாய்ச்சல்**

செல்வி த.விஜிதா, செல்வி. சு. மலர்விழி (பொலிகண்டி இ.த. கல்லூரி), செல்வி. வாசுகி (நெல்லியடி ம.ம. வித்தி.

**குண்டு எறிதல்**

திருமதி. சு. திவாகரன் (கரணவாய் தாமோதர வித்தி), திருமதி. ஈஸ்வரி ஜெயராசா (வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி), செல்வி. என். ஆனந்தி (கரணவாய் மகா வித்தி.

**தட்டெறிதல்**

செல்வி. என். ஆனந்தி (கரணவாய் மகா வித்தி), திருமதி ஜெ. அருந்தவராசா (மெதடிஸ் பெண்கள் உ. பாடசாலை) ,திருமதி. சு. திவாகரன் (கரணவாய் தாமோதர வித்தி.

**உயரம் பாய்தல்**

செல்வி. சூ. யாழினி,செல்வி. வீ. யாழினி (நெல்லியடி ம.ம. வித்தி.

**கிரிக்கெட்**

நெல்லயடி ம.ம. வித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, தொண்டைமானாறு வீரகத்தி ம. வித்தி.

**கரப்பந்து**

விக்னேஸ்வராக் கல்லூரி,நெல்லியடி ம.ம. வித்தி, கரணவாய் மகா வித்தி.

**வலைப்பந்து**

மெதடிஸ் பெண்கள் உ. பாடசாலை, கரணவாய் மகா வித்தியாலயம், நெல்லியடி ம.ம. வித்தியாலயம். ஓ

## இராசி பலன்

03.10.2009
(புரட்டாதி 17 சனிக்கிழமை)
சதுர்த்தசி முற்பகல் 11.29 மணிவரை
பூரட்டாதி முற்பகல் 10.43 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
பூரணை விரதம்

| | |
|---|---|
| மேடம் | காரிய அலைச்சல், போசன சுகம், அமைதிக்குறைவு, சுபசெலவு. |
| இடபம் | தடைப்பட்ட காரியம்கைகூடும், தனவருவாய், கலந்துரையாடல், குடும்ப சுகம். |
| மிதுனம் | அதிகபிரயாசை, நண்பர்கள் உதவி, போசன சுகம், நல்ல செய்தி. |
| கடகம் | புதிய திட்டமிடல், திடீர் பயணம், கட்டுப்பாடு, தந்தை வழி உறவு. |
| சிங்கம் | ஆரோக்கியக்குறைவு, அச்சமான நிலை, முயற்சி தாமதம், போசன சுகம். |
| கன்னி | சிந்தனை மிகுதி, நண்பர்கள் சந்திப்பு, பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம். |
| துலாம் | சுவாரஸ்யம், தொழில் முயற்சி, சத்துரு ஜெயம், உற்சாகம். |
| விருச்சிகம் | வியாபார நன்மை, புத்திரரால் கவலை, தனவிரயம், பெரியோர் உதவி. |
| தனுசு | பிரயாண நன்மை, தன்னம்பிக்கை, நல்ல முயற்சி, மாதா சுகம். |
| மகரம் | வாக்கு மேன்மை, பிரயாண நன்மை, முயற்சி பலிதம், பொருள் சேர்க்கை. |
| கும்பம் | வேலைச்சுமை, எடுத்த காரியம் தாமதமாகும், தனவிரயம், கௌரவக்குறைவு. |
| மீனம் | சிந்தனை மிகுதி, அதிக பிரயாசை, போசன சுகம், சயன சுகம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 40 |
| தக்காளி | 20 | 30 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 40 |
| கோவா | 80 | 90 | 80 |
| கரட் | 70 | 90 | 80 |
| பூசணி | 30 | 40 | 25 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 20 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 40 |
| பெரிய வெங்காயம் | 40 | 50 | 50 |
| பாகற்காய் | 70 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 60 | 60 | 40 |
| லீக்ஸ் | 80 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | 40 |
| கறிமிளகாய் | 60 | 80 | 60 |
| முருங்கைக்காய் | 150 | 180 | 120 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 260 | 280 | 260 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# உலகுக்கு உணவளித்த உத்தமர்

## நோர்மன் போர்லாக்

**போர்லாக்கைப் பற்றி பேராசிரியர் எம். எஸ். சுவாமிநாதன் கூறியதாவது,**

பஞ்சம் பட்டினியென்னும் கடலில் ஜீவ ஒளியாக உதித்தவர் போர்லாக் அவர்கள்.



இந்தியாவின் பசுமைப் புரட்சியின் தந்தை பேராசிரியர் எம். எஸ். சுவாமிநாதன்

மனிதர்களை நேசித்ததுடன் பட்டினிச் சாவிற்கெதிராக அர்ப்பணிப்புடனும் எந்தவொரு குடியுரிமையினரின் பக்கமும் சாராதவராக உலகத்திலுள்ள அனைத்து மக்களுக்காகவும் அவர்களுக்கான உணவுற்பத்தி என்பதனையே கருத்தாக கொண்டு செயற்பட்டவர்.

இந்தியாவிற்கும் போர்லாக்கிற்குமான தொடர்பு 1960களிலேயே ஆரம்பமானது. அந்தக் காலங்களில் இந்தியா 10 மில்லியன் டன்கள் கோதுமையை அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்து கொண்டிருந்தது. அமெரிக்க கப்பல் வரும்வரை கோதுமைக்கு காத்திருக்க வேண்டிய நிலையில் இந்திய மக்கள் இருந்த காலமது.

இதேநேரத்தில் மெக்சிக்கோவில் போர்லாக்கினால் கண்டுபிடிக்கப்பட்ட கோதுமையில் குட்டை இனம் (Dwart variety) இந்தியாவின் உணவுற்பத்தியையே மாற்றியமைத்தது.

வரலாறு காணாத விளைச்சல் கோதுமையில் பெறப்பட்டது. இந்தியாவின் வேளாண் வளர்ச்சிப் படிகளில் இதுவொரு மைல்கல். இந்திய மக்களின் உணவுத் தேவையை இந்தியக் குடிமக்களே தங்களது வேளாண்மையை விருத்தி செய்து பூர்த்தி செய்ய தூண்டு கோலாக நடந்த இந்த நிகழ்வு இந்தியாவின் வரலாற்றில் அதுவும் வேளாண் நாடுகளிலொன்றான அதிகம் சனத்தொகையைக் கொண்ட ஆசிய நாட்டின் தனித்துவத்தை தட்டி நிமிர்த்த உதவிய கைங்கரியம் என்றால் மிகையாகாது.

பேராசிரியர் சுவாமிநாதன் மேலும் கூறியதாவது,

1947 களிலிருந்து 1960 வரை டெல்லியிலுள்ள இந்தியாவின் வேளாண் ஆய்வு மையத்தில் அவர் பணியாற்றிய காலத்தில் கோதுமையினதும் நெல்லினதும் உற்பத்தியைப் பெருக்க அவற்றை பயிர்செய்யும் நிலத்தை விஸ்தரிப்பதனையே நோக்கமாக கொண்டதாகவும் அதன் மூலம் தாங்கள் எதிர்பார்த்தளவிற்கு விளைச்சலில் பாரியளவு மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை. ஒரு கெக்டருக்கு ஒரு மெற்றிக் தொன் மட்டுமே கிடைத்தது.

இதே காலத்தில் போர்லாக் இந்தியாவிற்கு வருகை தந்திருந்ததாகவும் அதிலிருந்து அவருடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றக்கூடிய வாய்ப்புக்கள் கிடைத்ததாகவும் பெருமையுடன் நினைவு கூர்ந்தார். தொடர்ந்து 50 ஆண்டுகள் அவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தமை தமக்குக் கிடைத்த வரமாகவே கருதுகின்றார்.

### ஆபிரிக்கா உணரத்தவறிய பசுமைப் புரட்சி

ஆபிரிக்காவில் பல நாடுகள் வறுமையால் துவண்ட போதிலும் அங்கு நடைமுறையிலிருந்த அரசியல் மாற்றங்களும் கொள்கைகளிலும் பசுமைப் புரட்சியினால் தாக்கமெதுவையும் ஏற்படுத்த முடியாமல் போனது.

. பசுமைப் புரட்சியின் நன்மைகளை சிறிதளவிலேனும் அனுபவிக்க முடியாத அப்பாவி மக்களை இன்றும் பசியும் பட்டினியும் வாட்டியெடுப்பதனையும் உணவுக்காக மிருகங்களுடன் தேடியலையும் பாவப்பட்ட மக்களாகவே அவர்கள் இருப்பது போர்லாக்கையும் பெருமளவில் பாதித்ததாக அறிய முடிகிறது. நன்மை தருகின்ற ஆய்வின் முடிபுகளை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்கும் வறிய மக்களை காப்பாற்றுவதற்கும் அரசியல் குறுக்கீடுகள் இருந்தன என்பது உண்மையே.

நான் பெரிது நீ பெரிது என்றும் எல்லாம் தங்களுடையது என வாதிடும் இந்நாட்டு அரசியல் வாதிகளின் சுயநலப் போக்கால் பசுமைப் புரட்சியின் கதவுகளைக் கூட தட்ட ஆபிரிக்க மக்களால் முடியாது போய்விட்டது.

(தொடரும்)

**இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 9-XVI**



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

# யாழ். மாவட்டத்தில் பழமரச் செய்கையும் பயன்தரு மரங்களின் செய்கையினை ஊக்குவித்தலும்



கமநெகும திட்டத்தின் கீழ் பப்பாசிச் செய்கையை ஊக்குவித்தல் திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட கன்றுகளின் ஒரு தொகுதி

விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் பழமரக்கன்றுகள் மற்றும் வனமரக்கன்றுகள் விநியோக நிகழ்வுகள் பிரதேச விவசாயப் போதனாசிரியர்களால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்படுகின்றன.

இந்நிகழ்வுகளில் பிரதேச செயலகத்தின் அலுவலர்கள், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், கமக்காரர் அமைப்புக்கள், சமூக மட்ட அமைப்புக்களின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். இதன்போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

விவசாய திணைக்கள உத்தியோகத்தர்களால் கன்றுகளை நடுகை செய்தல், பராமரித்தல் தொடர்பான விளக்கங்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருவதுடன் அவை தொடர்பான கையேடுகளும் விநியோகிக்கப்படுகின்றன.

பழமரக்கன்றுகள், பயன்தரு மரக்கன்றுகளை நடுகை செய்யும் பயனாளிகள் ஒவ்வொருவரும் பின்வரும் நடவடிக்கைகளை பின்பற்றுதல் அவசியமானதாகும்.


**1. இடத்தெரிவு**

- நிலமட்டத்தில் இருந்து மண்ணின் ஆழம் 6' ஆக இருத்தல் வேண்டும்.
- நீர் வடிப்பியல்புள்ள மண்ணாக இருத்தல் வேண்டும்.

**2. நடுகைக்குழி தயாரித்தல்**

- 60 செ.மீ× 60 செ.மீ× 60 செ.மீ நீள அகல ஆழமுள்ள குழிகளைத் தோண்டவும்.
- கன்றுகளை நடுகை செய்வதற்கு முன்னர் நன்கு உக்கிய சேதனப் பசளை, மேல் மண் ஆகியவற்றை 1:1 என்ற விகிதத்தில் இட்டு குழியை நிரப்பவும்.

**நடுகைக்குழி தயாரித்தல் முறை படத்தில் காட்டப்பட்டுள்ளது.**




குழிக் கலவையால் மூடப்பட்ட குழி

- சில மரங்கள் நீர் தேங்குவதைச் சகிக்க மாட்டா. ஆதலால் மரத்தின் வகைக்கேற்பவும் மண்ணின் தன்மைக் கேற்பவும் வடிகால் அமைத்தல் அவசியம்.

**3. கன்றுகளை நடுகை செய்தல்**

- நடுவதற்கு முன் பொலித்தீனை கூரிய பிளேட் ஒன்றினால் மெதுவாக வேர்கள் சிதைவுறாமல் கீறி அகற்றவும்.




- பொதிமண் சிறிது உலர்வாக இருந்தால் மண் உருளை தளர்ந்து வேர்கள் பாதிப்படையமாட்டாது, பொதி மண் உலர்வாக இருப்பது நன்று.
- நடுகைக் குழியில் வைத்தே கொள்கலன்களை அகற்றவும்.
- நடுகையை மேற்கொள்ளல்.

**4. நீர்ப்பாசனம் செய்தல்**

- கன்றுகள் தழைத்து துளிர்க்கும் வரை ஈரம் காயாமல் பார்த்து நீர் ஊற்றவும்
- நட்டவுடன் பாத்தி அமைத்து பாத்தியினுள் நீர்ப்பாசனம் செய்யவும்
- வேர்த்தொகுதி முற்றாக நனையக் கூடியவாறு நீர்ப்பாசனம் செய்யவும்
- ஆழமான வேர்த் தொகுதி உருவாகக் கூடியவாறு வேர் விருத்தி தூண்டக் கூடிய வகையில் சீரான கால இடைவெளியில் நீர்ப்பாசனம் செய்யவும்.

**5. பாதுகாத்தல் நடவடிக்கைகள்**

- கன்றுகள் நிமிர்ந்து நிற்கக்கூடியவாறு ஆதாரம் வழங்கவும்.
- வெய்யிலில் இருந்து பாதுகாக்க நிழல் வழங்கவும்.



கன்றினது மண் மட்டமும் குழியினது மேல் மட்டமும் சமமாயிருக்க வேண்டும்

- கன்றைச் சுற்றிக் களைகளைக் கட்டுப் படுத்த பத்திரக்கலவை இடவும்.
- உரிய முறையில் கத்தரித்து வளர்க்கவும்.
- கால்நடைகள் கடிக்காமல் பாதுகாக்கவும்
- பூச்சி, பீடைகளிலிருந்து பாதுகாக்கவும்.

மேற்கூறப்பட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டு பழமரக்கன்றுகள், பயன்தருமரக் கன்றுகள் ஆகியவற்றை சிறப்பான முறையில் நடுகை செய்து பராமரிப்பதன் மூலம் பழப் பயிர்களின் உற்பத்தியையும், விஸ்தீரத்தையும் அதிகரிக்க முடியும். இதன் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படுவதுடன் நுகர்வோரும் தமக்கு தேவையான பழங்களை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

திரு. க. தனபாலசிங்கம்
திருமதி கவிதா ஜெயசீலன்
பாடவிதான உத்தியோகத்தர்கள்
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) அலுவலகம்
யாழ்ப்பாணம்.

பழங்கள் மேலதிகமாக கிடைக்கும் காலங்களில் இவற்றை ஜசுபி போன்ற பதப்படுத்தல் நிலையங்களுக்கு வழங்குவதன் மூலம் மேலதிகமாக வருமானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

(முற்றும்)



பயனாளி ஒருவருக்கான மாதுளங்கன்றினை உடுவில் பிரதேச செயலக உத்தியோகத்தர் வழங்குகின்றார்.

# விஜய நகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்

16

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

இவர்களது ஓவியங்கள் தமிழகத்தில் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவாரூர் திருவரங்கம், கும்பகோணம், திருவீழிமிழலை, உத்தரமேரூர், திருவொற்றியூர், திருவலஞ்சுழி, சிதம்பரம், திருவெள்ளறை, மதுரை, அழகர் கோவில், நத்தம், கோவில் பட்டி , ஸ்ரீ வில்லிபுத்தூர், ஸ்ரீ வைகுண்டம் போன்ற இடங்களில் காணக்கிடைகின்றன. இவர்களது ஓவியங்களில் ஆடை அணிகலன் அலங்காரங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆடைகள் பூ வேலைப்பாடுகளுடன் மடிப்பு மடிப்பாகவும் திகழ்கின்றன. சிகையலங்காரம் புதுவிதமாக அதாவது நீண்ட கொண்டையுடையதாகவுள்ள பக்கவாட்டுப் பார்வை காட்டப்பட்டுள்ளதையும் காணமுடிகின்றது. இவர்கள் கால ஓவியங்களில் பச்சை, சிவப்பு, மஞ்சள், கருப்பு போன்ற வண்ணங்களே அதிகம் பயன்படுத் தப்பட்டுள்ளன.

இவ்வோவியங்கள் அமைக்கப்பட்டுள்ள சட்டங்களின் நான்கு பக்க விளிம்புகளிலும் பூ வேலைப்பாடு, வட்டம், சங்கிலித் தொடர் போன்ற அலங்கார அமைப்புகளையும் காணலாம்.

தமிழக அரச பரம்பரையினரில் ஓவியங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தவர்கள் இம் மன்னர்களே. அர்ச பரம்பரையினரின் கலை வளர்ச்சியில் இறுதிக் கட்டமும் இவர்களுடையதேயாகும்.


விஜயநகர வேந்தர் - நாயக்கர் ஆட்சிக் காலத்தில் இசை பற்றிய கல்வெட்டுச் செய்திகள் இல்லையெனினும் இலக்கியம் மற்றும் சிறப ஓவியங்களில் அது பற்றிய செய்திகள் பெருகிக் கிடக்கின்றன. இக்காலத்தைச் சேர்ந்த இலக்கியங்களில் குறிப்பிடத்தக்கவையாக அருணகிரிநாதர் அருளிச் செய்த திருப்புகழ், குமரகுருபரின் மீனாட்சி பிள்ளைத் தமிழ், காளமேகப் புலவரின் பாடல்கள், தாயுமானவரின் பாடல்கள் போன்றவற்றில் அக்கால இசையின் தன்மைகளைக் காணலாம். திருப்புகழ்ப் பாடல்கள் வெவ்வேறு சந்தங்களையும் இசையமைப்புகளையும் கொண்டவை. இவை இசையுலகில் 'தாள வகைகள் நிறைந்த களஞ்சியமாகும். இது வரை அச்சிடப்பட்டுள்ள 1329 திருப்புகழ் பாடல்களில் அடங்கியுள்ள வெவ்வேறான சந்தங்கள் 859 ஆகும். கர்நாடக இசையில் காணமுடியாத, விவரிக்க முடியாத தாளமர்ம விரிவுரைகளைக் கொண்டது.

இந்நூல் அருணகிரிநாதர் பூத வேதாளங்கள் இசைக்கும் 17 வகை மத்தளங்களைப் பற்றிக் கூறுகிறார்.

ஏறத்தாழ இவரது காலத்திற்குச் சற்றுப் பின்னால் வாழ்ந்த சைவ எல்லப்ப நாவலர் என்பார் சக்தியைத் தனது இடதுபுறம் வைத்துறையும் சிவபெருமானின் திருண்ணாமலைத் தலத்தில் நெல் வயல்களில் ஈக்கள் ரீங்காரமிடுகின்றன. அவற்றின் ஒலியில் மலஹரி, குறிஞ்சி, தேசி, பைரவி போன்ற ராகங்கள் வெளிப்படுகின்றன என்று குறிப்பிட்டுள்ளார். குமரகுருபரரின் பாடல்கள் சிறந்த ஓசை நயம் கொண்டவை. தாயுமானவர் இசை மெட்டோடு கூடிய பல பாடல்களை இயற்றினார். நாட்டுப்புற இசையமைப்பைப் பின்பற்றினார். இதே காலத்தில் இயற்றப்பட்ட திருக்குற்றலாகக் குறவஞ்சியில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்று பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன.

மடந்தை யாழ் வாசித்தல் மற்றும் இராகங்களும், தாளங்களும் இதில் சுட்டப்பட்டுள்ளன. கின்னரியாழ், மகரயாழ், வங்கியம், தம்புரு போன்ற இசைக் கருவிகளும் மலகிரி, தோடி, வராடி, முகாரி, கல்யாணி, யாகிரி, காந்தாரி, காம்போதி, சங்கராபரணம், தேவகாந்தாரி போன்ற இராகங்களும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**விஜயநகர நாயக்கர் கால கலைப்படைப்புக்கள்**


ஸ்ரீரங்கம்-சுற்றுப்பிரகாரம்

**பேராசிரியர் கு. சேதுராமன்**
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

இக்காலத்தில் தெலுங்கில் போலூர் கோவிந்த கவியால் இயற்றப்பட்ட "தாளதசப் பிராண தீபிகா" வும், "ராகதாள சிந்தாமணி" யும் சிறந்த இசை நூல்கள் ஆகும். இசையும் நடனமும் கவிதையும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டுள்ளதை கோவிந்த கவி உணர்த்தினான். தஞ்சைநாயக்க மன்னர் இரகுநாத நாயக்கர் நுண்கலை வித்தகராக விளங்கினார்.

(தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

139



மத நம்பிக்கை மற்றவர்கள் மீது எறியப்படும் கற்களாக மாறுவதைக் கண்டுள்ளோம்.நச்சுத்தன்மை வாய்ந்த கழிவுகளை ஆறுகளில் கொட்டும்போதெல்லாம் நிறுவனங்கள் விடுதலைக் குரலை முன்னெடுத்து தங்கள் செயலை நியாயப்படுத்துகிறார்கள். இப்படி நிகழும் போதெல்லாம் மக்கள் விழுமியங்களின் மூலம் அவற்றைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்தும் ஆற்றலில் தான் நம்பிக்கை கொண்டுள்ளனர். அவற்றை மேற்கோள்காட்டி நியாயத்தை வெளிப்படுத்தி தடுக்க முயல்கின்றனர்.

சிலவேளைகளில் சரியான சமநிலையைக் கண்டு கொள்வது சுலபம். உதாரணமாக தனிமனித சுதந்திரம் மற்றவர்களுக்குத் தீமை இழைக்குமாயின், அதைக் கட்டுப்படுத்த சமுதாயத்துக்கு உரிமையுண்டு. இதே போன்று அரசாங்கம் பிரஜைகளின் சுதந்திரத்தை முடக்குவதிலும் சில கட்டுப்பாடுகள் வேண்டும்.

உதாரணம் மக்கள் என்ன உணவை உட்கொள்ளவேண்டும் என்று விதி கொண்டு வர முடியாது.மக்கள் எதிர்ப்பார்கள்.

நெருக்கடிகள் எழுகின்றமைக்கு முக்கிய காரணம் நாம் வாழும் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டு நிற்கும் அமெரிக்கர்களின் விழுமியங்களுக்கிடையே சரியான சமநிலையைக் கொண்டு வருவது கடினமான செயல் தான்.

நெருக்கடிகள் எழுகின்றன. அதற்குக் காரணம் இன்று உலகமக்கள் நெருக்கடியான சிக்கலும் முரண்பாடுகளும் நிறைந்த கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்கர்கள் 9/11 ன் பின் அரச யாப்பு விதித்த கோட்பாடுகளைத் தூக்கியெறிந்து விட்டுத் தான் பயங்கரவாதத்துடன் போராட வேண்டி வந்தது. எத்தகைய ஆற்றலும் அறிவும் வாய்ந்தவராக அமெரிக்க அதிபர் ஒருவர் இருப்பினும் நாட்டின் பாதுகாப்புக்கும் மக்களின் குடியுரிமைக்கும் இடையில் எதைத் தேர்ந்தெடுப்பது என்பதில் சிரமப் படத்தான் வேண்டும்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அடிக்கடி தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை விவாதிக்கும் போது அமெரிக்கர்கள் சரியான முடிவுக்கு வர முடியாதிருக்கின்றனர். அரசாங்கம் தலையிடும் எதுவாயினும் அதுபற்றிய வாதப் பிரதிவாதங்களின் பொறி பறக்கும்.அதுதான் அமெரிக்காவின் ஜனநாயகம். அது இன்னும் நன்றாகப்பணி புரிய வேண்டுமாயின் மக்கள் கட்சிகள், மாற்றுக் கருத்துக்கள் உள்ள பக்கத்தையும் அங்கீகரித்து அவற்றையறிய வேண்டும்.

இலினோய்ஸ் மாநிலத்தில் ஜனநாயகக் கட்சியினர் பெரும்பான்மையாக ஆட்சியைக் கைப்பற்றிய பின் ஒபாமா, கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரணை செய்யும் போது அதை வீடியோப் படம் எடுக்க வேண்டும் என்று ஒரு மசோதாவைக் கொண்டு வந்தார்.

அந்தக் காலத்தில் மரணதண்டனை கொடுப்பதில் பல குறைபாடுகளிருப்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டனராயினும் பலர் அவரது மசோதா சட்டமாவதைத் தடுத்தனர்.

மரணதண்டனை மூலம் குற்றங்கள் நடைபெறுவதைத் தடுக்கமுடியாது என்பது ஒபாமாவின் வாதம். அதேநேரத்தில் சில குற்றங்கள்- ஒரே நேரத்தில் பலரைக் கொல்வது, (Mass murder), கற்பழிப்பு, சிசுக்கொலை -இவைகள் போன்ற பயங்கரமான குற்றங்களுக்கு மரணதண்டனை கொடுப்பதை சமுதாயம் நியாயப் படுத்தலாம்.அக் காலத்தில் கொலைக் குற்றங்கள் நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்ட விதம் தவறுகள் நிறைந்து இருந்தன.சந்தேகமான வழிகளில் காவல்துறையின் விசாரணைகள் காணப்பட்டன. இருப்பினும் மரணதண்டனையை நிறுத்த எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.

ஒபாமா பல வாரங்களாக நாட்கணக்கில் வழக்கறிஞர்கள், காவல்துறை, மரணதண்டனையை எதிர்த்தவர்கள் என்று பலரையும் கூட்டி கூட்டம் போட்டார். ஊடகங்களின் கண்களில் படாம்ல் இவை நடத்தப்பட்டன.

**ஜம்பொன்**

(தொடரும்)

# கடல் வாழ் உயிரினங்களில்...

(நேற்றைய தொடர்ச்சி)

### பதப்படுத்தல்

பொதுவாக இரண்டு முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இரண்டு முறைகளிலும் பொதுவாக பின்பற்றப்படும் நடைமுறைகள் பின்வருமாறு பதப்படுத்தலுக்கு முன்னர் கடலட்டைகளை கடல் நீரில் நன்கு கழுவி அவற்றின் தோலிலுள்ள மண் மற்றும் முருகைக்கற்பாறைத் தொங்கல்களை அகற்ற வேண்டும்.

சேதமடைவதைத் தவிர்ப்பதற்கு அழுத்துமான தட்டையான பிளாஸ்ரிக் தட்டுக்களைப் பாவிப்பது சிறந்தது . பின்னர் நிழலான இடத்தில் வைத்து ஈரலிப்பை பேணுவதற்கு கடல் நீரை உபயோகிக்கலாம் நன்னீரை பாவிப்பதை தவிர்க்க வேண்டும் .

ஏனெனில் அது உடற்சுவரில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் பொருளின் தரத்தை குறைக்கும். பதப்படுத்தலுக்கு போதுமானளவு கடலட்டைகளை கிடைக்காத வேளைகளில் கடலில் ஓரளவு ஆழமான குழியை ஏற்படுத்தி கடலட்டைகளை அதிலிட்டு பராமரிக்கலாம். அல்லது செயற்கைத் தொட்டிகளில் அடிக்கடி கடல் நீரை மாற்றி சேமிக்கலாம் . ஏனெனில் பதப்படுத்தல் செயன்முறையை ஆரம்பிக்கும் வரை கடலட்டைகள் உயிருடன் இருப்பதே தரமான உற்பத்தியை பெறுவதற்கான சிறந்த வழியாகும் .

### தேவையான உபகரணங்கள்


01. அவிப்பதற்கான பெரிய கொள்கலன் ஆழம் குறைந்ததாகவும்சீரான வெப்பத்தை வழங்குவதாகவும் இருக்க வேண்டும் .
02. கரண்டி போன்ற உபகரணம் .
03. கூரிய கத்தி
04. புகையூட்டலுக்கான உபகரணம். இரண்டு தளங்களை உடையதாகவும் கீழ் தளத்தில் உற்பத்தியாகும் புகை மேற் தளத்திலுள்ளகடலட்டைகளை புகையூட்டுவதாகவும் இருக்க வேண்டும்.
05. சூரிய உலர்த்தலுக்கான தட்டுகள். மரச்சட்டத்தையும் உலோக வலையையும் கொண்டிருக்கலாம் .
06. ஏனையவை தூய உலர்ந்த பைகள், விறகு / தென்னம் பொச்சு, கடல்நீரை கையாள்வதற்கான வாளிகள், சிறியகுச்சிகள் தயார்ப்படுத்துவதற்கான மேசைகள்.

### செயன்முறை

01. அவித்தல்

ஒரேயளவான கடலட்டைகளை தரம் பிரித்து ஒவ்வொன்றாக கொள்கலனில் கொதிக்கும் கடல் நீரிலிட்டு முழுமையாக அமிழ்த்துதல் வேண்டும். அவிக்கும் போது அளவுக்கதிகமாக வீங்கினால் சிறிய துளையை ஏற்படுத்த வேண்டும். அத்துடன் மெதுவாக கிளறி சீரான வெப்பமேற்றலை உறுதி செய்து கடலட்டைகள் இறப்பர்பந்து போல் தென்பட்டதும் முதலாம் அவித்தலை நிறைவு செய்யலாம். பின்னர் கடலட்டைகளை குளிர்ந்த கடல் நீரில் இடவேண்டும்.

02. நீள்பக்கமாக வெட்டி குடற்பகுதியும் ஏனைய உள்ளடக்கங்களையும் அகற்ற வேண்டும். ஆனால் உடற்சுவருடன் சேர்ந்திருக்கும் தசையை அகற்றக்கூடாது. பின்னர் மீண்டும்தூய கடல்நீரில் கழுவ வேண்டும்




03. இரண்டாம் முறை அவித்தல்.

அண்ணளவாக 15-40 நிமிடம் வரை தொடர்ச்சியாக கிளறிய வண்ணம் அவிக்கவும். அவிக்கும் நேரம் அங்கியின் இனம் எண்ணிக்கையில் தங்கியுள்ளது.

இதன் போது கடலட்டை மெதுவாகச் சுருங்குவதுடன் கடினத்தன்மையும் பெறும் பின்னர் மீண்டும் தூய குளிர்ந்த கடல் நீரினால் கழுவ வேண்டும்.

04. புகையூட்டல்

இதற்கு விறகு பொச்சுமட்டையை உபயோகிக்கலாம். புகையானது சீரான வெப்பத்தை வழங்குவதை உறுதி செய்ய வேண்டும். வெப்பம் கூடினால் கடலட்டை அதிகம் சுருங்குவதுடன் தரமும் குன்றும்.

புகையூட்டலுக்காக கடலட்டையை நீள்புறமாக வெட்டி பிளவினுள் சிறிய குச்சிகளை இட்டு அகலமாக்கி புகையூட்டும் பரப்பை அதிகரித்து புகையூட்டும் தட்டில் பிளவு புகைப் பிடிக்கும் வண்ணமாக அடுக்கி ஏறத்தாள 24-48 மணி நேரம் புகையூட்ட வேண்டும். இந் நேரத்தில் தட்டுக்களை சீராக அமைப்பதன் மூலம் புகையூட்டலை சீராக்கலாம்.

பின்னர் குச்சிக்களை அகற்றி சிறிய நாரினால் இறுக்கக்கட்டி சூரிய உலர்த்தலுக்கு தயார் செய்யலாம்.

05. சூரிய உலர்த்தல்

உலர்த்தலுக்கான தட்டில் ஒன்றையொன்று முட்டாத வண்ணம் சீராக தனித்தனியாக அடுக்கி 4 -5 நாட்களுக்கு அல்லது தேவைப்படின் 1-2 கிழமைகளுக்கு உலர்த்தவும். நன்கு உலர்ந்த கடலட்டையின் தோலில் துகள்கள் தென்படும். பின்னர் நாரை அகற்றி தூரிகை ஒன்றினால் சுத்தம் செய்து கடலட்டைகளின் அளவுக்கு (நீளம்/நிறை) ஏற்ப தரம்பிரித்து பொதி செய்யலாம்.

### கடலட்டைகளைப் பயன்படுத்தலுக்கான பாரிய விசேட முறை

இம்முறை *Holothuria scabra* மற்றும் *Holothuria scabra vari versicolar* க்கு சிறந்தது. ஏனெனில் இவற்றில் உடல் மேற்பரப்பிலுள்ள சுண்ணாம்பாலான முட்கள் போன்ற அமைப்பை (spicules)அகற்ற உகந்த முறையாகும். இவ்வினங்களே எமது பிரதேசத்தில் அதிகம் கிடைப்பதால் இம்முறை சிறந்ததாகும்.

### செயன்முறை

01. குடலை அகற்றும்

இவ்வினங்கள் பொதுவாக பிடிபட்டதும் தற்காப்பு நடவடிக்கையாக குடலை வெளித்தள்ளும் இயல்புடையவை. இல்லாவிடில் குதப்பகுதியில் இருந்து நீள்பக்கமாக வெட்டுவதன் மூலம் குடற்பகுதியை அகற்றலாம். மெதுவாக அழுத்துவதன் மூலம் நீரையும் வெளியேற்றலாம் .

02. முதலாம் அவித்தல்

பொதுவான முறையை ஒத்தது. அவித்ததும் குளிர்ந்த கடல் நீரில் க முவ வேண்டும்

03. இதன்போது ஏறக்குறைய 20-30 செ.மீற்றர் ஆழமான மண்குழியில் (அலை மட்டத் திற்குமேலாக) அவித்த கடலட்டைகளை இட்டு கடல் நீரில் நனைந்த சாக்கினால் மூடி அதன் மேல்மண் இடல் வேண்டும். இச் செயன் முறையால் கடலட்டையில் வெளிச்சுவர் பக்ரீரியாக்களால் பிரிகையாக்கப்படுதால் spicules கழற்றப்டும்இச்செயன்முறைக்காக ஏறக்குறைய 12-18 மணித்தியாலங்கள் மண்ணில் புதைப்பது சிறந்தது.


பின்னர் கடலட்டைகளை எடுத்து கடல் நீரில் நன்கு கழுவி பிரிகையாக்கப்பட்ட பகுதியை அகற்றல் வேண்டும். முழுமையாக அகற்றப்படாவிட்டால் மீண்டும் அவித்து புதைக்கும் செயன் முறையை செய்யலாம்.

04. இரண்டாம் முறை அவித்தல்

மீண்டும் கொதிக்கும் நீரில் அண்ணளவாக40-45 நிமிடங்களுக்கு தொடர்ச்சியாக கிளறிய வண்ணம் அவித்தல் வேண்டும்.

05. புகையூட்டல்

*Holothuria scabra* வுக்கு புகையூட்டல்




அவசியமில்லை. தேவைப்படின் (சந்தை தேவைக்கு ஏற்ப) மேற்கொள்ளலாம்.


06. சூரிய உலர்த்தல்

உலர்த்தும் தட்டில் தனித் தனியாக அடுக்கி 4-5 நாட்களுக்கு காற்றோட்டமாக சூரிய வெப்பத்தில் உலர்த்தல். சூரிய உலர்த்தலுக்காக வினைத்திறனான உபகரணங்கள் தற்போது கிடைக்கின்றன.

### தரம் பிரித்தல்

இன வாரியாகவும் அளவு ரீதியிலும் தரம் பிரிக்கவேண்டும்.

1- *Holothuria nobilis*, 2- *H.scabra*, 3- *H.scabra versicolor*




உயர்தரம்→Sand Fish (Holothuria scabra), White teat fish black teatfish

நடுத்தரம்→ Prickly red fish

குறைதரம்→ Deep-Water red fish, Stone Fish, Surf Fish, Blackfish, Brown Sand Fish, lollyFish…

பதப்படுத்திய கடலட்டைகளில் (beche-de-mer) பெரிய நீளமானவை சிறந்தவையாகும். அத்துடன் சீரான தோற்றமுடையவையாகவும் நீரடக்கம் குறைந்தவையாகவும் இருக்க வேண்டும்.

7. பொதி செய்தல்

பொதுவாக சாக்கு உகந்தது எனினும் பிளாஸ்ரிக் வலைப்பைகளிலும் பொதி செய்யலாம். இலங்கையின் கடலட்டைகள் சீனா, யப்பான், சிங்கப்பூர் மற்றும் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ஆச்சரியப்படத்தக்க வகையில் சில நாடுகளில் வர்த்தக நோக்கத்திற்காகவும் வளங்களை இயற்கை வாழிடங்களில் மீள்நிரப்பல் செய்வதற்காகவும் கடலட்டைகள் கடல் நீரில் வளர்ப்பு (Mariculture) செய்யப்படுகின்றன.

### கடலட்டைகளை நீரில் வளர்ப்பு செய்தல்

உச்சப்பயன்பாடு காரணமாக அருகிவரும் இனங்களில் ஒன்றான கடலட்டைகளை செயற்கை முறையில் இனப்பெருக்கமடையச் செய்யும் நடவடிக்கைகளில் சீனா, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் ஈடுபட்டுள்ளன. சீனாவில் தற்போது உலர் நிறையில் 1000 தொன்னுக்கு அதிகமான கடலட்டைகள் கடல் நீரில் வளர்ப்பு (marine aquaculture) மூலமே உற்பத்தி செய்யப்படுகின்றன. *Stichopus japonicus*, *Holothuria scabra* என்பன பிரதானமாக வளர்க்கப் படுகின்றன.

வளர்ப்பிற்கான ஆண், பெண் கடலட்டைகள் இயற்கை வாழிடங்களில் இருந்து பெறப்படும் கடல் நீரைக் கொண்ட தொட்டிகளில் இடப்பட்டு உணவாக அல்காக்கள் வழங்கப்படும். இவற்றில் ஆண் மற்றும் பெண்ணை புறத் தோற்றத்தை வைத்து இனங்கானல் கடினமாகும். எனினும் இனப்பெருக்க நடத்தைகள் மூலம் வேறுபிரித்து அறியலாம்.

பொதுவாக முதலில் முதிர்ந்த ஆண் விந்தை வெளியேற்றுவதைத் தொடர்ந்து பெண் முட்டைகள் இடும். தொடர்ச்சியான அவதானம் மூலம் ஒரு சோடி கடலட்டைகளை தனியான தொட்டிகளில் பேண முடியும். கருக்கட்டல் புறக் கருக் கட்டல் ஆகும்.

கருக்கட்டிய முட்டைகளை கடல்நீரில் சுத்தம் செய்து பேணும் போது ஒரு நாளில் குடம்பிப்பருவம் தோன்றும். இவற்றிற்கு உணவாக பொடியாக்கப்பட்ட அல்காக்களை ஆரம்பத்திலும் பின்னர் ஒரு கல அல்காக் களான *Chaetoceros calcitrans* மற்றும் *Tetraselmis chuii* என்பனவற்றை வழங்கலாம்.

குடம்பி நிலைகளாவன dipleurula, auricularia doliolaria pentactual என்பனவாகும். முதிர் நிலைக்குடம்பிகளுக்கு *Sargassum* இனை நன்கு சுத்தப்படுத்தி உணவாக வழங்கலாம். இளம் நிலைகளை கடலில் Rectangular cage, Velon screen cage மற்றும் Netlon cage என்பவற்றில் வளர்க்கலாம்.

கடலட்டைகள் உக்கல்களை உண்ணக் கூடிய அடித்தள வாழிகளாகும். எனவே இவற்றை இறால் பண்ணைகளில் வளர்க்கும் போது இறால்களுக்கு வழங்கப்படும் உணவின் மீதிகள் மற்றும் கழிவுப் பொருட்களை உணவாகக் கொண்டு தமது உடற்புரதமாக மாற்றுகின்றன. இதனால் இறால் வளர்ப்புத் தடாகங்கள் சுத்தமாவதால் இறால உற்பத்தியுடன் கடலட்டைகளும் குறைந்த செலவில் இந்தியாவில் வளர்க்கப்படுகின்றன.

எனவே இவ்வாறான கடல் நீரில் வளர்ப்புக்குரிய சாத்தியக் கூறுகளை எமது பிரதேசத்தில் ஆராய்ந்து இவ்வாறான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

எனவே கடலட்டை வர்த்தகத்தை நோக்கும் போது பதப்படுத்தல் முக்கிய பங்கை வகிப்பனால் மேற்காட்டிய எளிமையான முறைகளைப் பின்பற்றினால் பெருமளவு அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொள்ள முடியும். விசேடமாக தொழிற்சாலைகளை நிறுவி தரமான உற்பத்தியை மேற்கொள்வது சிறந்தது. அத்துடன் தரம் குறைந்த அளவில் சிறிய இளம் கடலட்டைகளை பிடிக்கும் போது சேதம் செய்யாது கடலில் மீண்டும் விட்டால் வளம் சுரண்டப்படுவதை தடுக்க முடியும். தற்போது கடல்வலயச் சட்டங்கள் தளர்த்தப்பட்ட நிலையில் அதிகளவு கடலட்டைகள் மட்டுமல்லாது ஏனைய கடல் உணவு வகைகளும் கட்டுப்பாடில்லாது குறுகிய இலாப நோக்கில் பிடிபடுவதை சந்தைகளில் காணப்படும் மிகச் சிறிய மீன்கள் வெளிப்படுத்துகின்றன.

எனவே மீன்பிடி உபகரணத் தெரிவும் இவ்வளங்களின் முகாமைத்துவத்தில் முக்கிய பங்கு வகிப்பதனால் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் குறிப்பாக அரச நிறுவனங்களினது யாழ். பல்கலைக்கழகத்தினதும் வழிகாட்டலும் ஆராய்ச்சிகளும் மீன்பிடித்துறையின் தூர நோக்குடனான நிலையான அபிவிருத்திக்கு உறுதுணையாக அமையும். எனவே கடலட்டைகளைப் பொறுத்தளவில் தற்போது சிறந்த முகாமைத்துவத்துடன் கூடிய அறுவடையும் திட்டமிட்ட தொழிற்சாலை ரீதியான தரமான பதப்படுத்தற் செயன்முறையும் மீனவர்களினதும் சார்ந்த தொழிலாளர்களினதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதுடன் நாட்டின் ஏற்றுமதி வர்த்தகத்திலும் பாரிய வளர்ச்சியை ஏற்படுத்தும். (முற்றும்)

# நல்லொழுக்கமாக வாழ வேண்டுமாயின் தீய பழக்கங்களை கைவிட வேண்டும்

நோயற்ற வாழ்வே உலகின் சிறந்த சுகம் என்பார்கள். இதேபோல் மனிதன் வாழ வேண்டுமாயின் நாம் சில பழக்க வழங்கங்களை கைவிட வேண்டும். அந்த வகையில் மனிதனாகப்பட்டவன் போதை தரும் வஸ்துகளையும் புகைத்தலையும் கைவிட்டு நல்லொழுக்கம் என்பது கடையில் வாங்கு பொருள் அல்ல. நாம் சிறு வயது தொடக்கம் நல்லொழுக்கத்தை பேணிவர வேண்டும். ஒருவன் நல்லொழுக்கத்தை பேணி வருவானாயின் கண்டிப்பாக தீய பழங்கங்களான போதைப் பொருட்களையும் புகைத்தலையும் நாடமாட்டான். நமது நாட்டில் தற்பொழுது நல்லொழுக்கம் என்பது குதிரைக் கொம்பாகி விட்டது.

தாய் தந்தை பொறுத்தே குழந்தைகளின் நல்லொழுக்கம் அந்த வகையில் பெற்றோருக்கும் குழந்தைக்கும் இடையிலான உறவைப் பொறுத்தே குறிப்பிட்ட குழந்தையின் நல்லொழுக்கம் அமையும் என்பது உளவியலாளர்களின் கூற்று. அப்பா அம்மா இரு வரும் ஒருவர் மீது ஒருவர் அன்பு காட்டி அந் நியோன்னியமாக நடந்து கொண்டால் அவர் களின் குழந்தைகள் பாதுகாப்பான உணர் வைப் பெறுகிறார்கள். பிற்பாடு அவர்கள் சமுதாயத்துடன் இணைந்து பழகுவதற்கும் நல்லொழுக்கமாக இருப்பதற்கும் இது கார ணமாக அமைகின்றது.

குழந்தைகள் மீது அன்பு காட்டுவதில் பெற்றோர் எந்த குறையையும் வைப்பதில்லை. ஆனால் தங்களுக்கிடையே ஏற்படும் சின்ன சின்ன மனஸ்தாபங்கள் கருத் வேறுபாடுகளுக்காக ஆவேசமாக மோதிக் கொள்கிறார்கள். குழந்தைகளின் கண் எதிரில் இது போல் நடந்து கொள்வதால் அவர்கள் மன தளவில் வெகுவாக பாதிக்கப்படுவார்கள். சண்டை சச்சரவுகளின்போது பெற்றோர் பயன்படுத்தும் வார்த்தைகள் கூட அவர்க ளைக் காயப்படுத்தும்.

இத்தகைய சூழ்நிலையை சந்திக்கும் குழந்தைகள் பெற்றோர் மீதான மதிப்பை குறைத்துக் கொள்ள ஆரம்பிப்பார்கள். இதனால் பெற்றோர் சொல்லிற்கு கட்டுப்பட மறுத்து தங்கள் மனம் போன போக்கிலேயே நடக்கத் தொடங்குவர். தாங்கள் செய்வது சரி என்ற எண்ணம் ஆழமாக வேரூன்ற ஆரம்பிக்கும். இது கெட்ட பழக்கங்க ளுக்கு அடிகோலும். தாய் தந்தை இடையிலான வெறுப்பு முடிவுக்கு வராத கோப தாபங் கள் ஆகிய வை குழந் தைகளைத் தான் பாதிக் கும்.



சண்டைக்கோழிகள் போல் மல்லுக்கு நிற்கும் பெரும்பாலான பெற்றோர் தாங்கள் சண்டை போட்டுக்கொண்டால் அது குழந்தைகளின் மென்மையான உள்ளத்தை காயப்படுத்தும் என்பதை உணர மறுக்கிறார்கள். குழந்தைகள் வளர்ந்த பின் எல்லாவற்றையும் தெரிந்து கொள் கிறார் கள் என பெற்றோர் நினைக்கின்றார்கள். ஆனால் இது மிகவும் தவறானது. அனைத்து வகையான உணர்வுகளும் குழந்தைப் பருவத்திலேயே முளைவிட தொடங்கிவடும்.

அம்மாவை அப்பா அடிக்கும் போது அல்லது. ஆவேசமாக திட்டும் போதும் குழந்தைகள் வீறிட்டு அழுவது இதனால் தான். தாய் தந்தை இடையிலான பிணக்கு அவர்களை இன்னும் கடுமையாகப் பாதிக்கும். ஒழுக்கமான நெறிகளிலிருந்து பல்வேறு குழந்தைகள் வழி தவறி செல்வதற்கு இது தான் காரணம்.

இன்று நல்லொழுக்கம் என்பது கேள்விக் குறியாக உள்ளது. இதற்கு பெற்றோர்களும் காரணமாகின்றார்கள். எத்தனையோ குடும்பங்களில் பிள்ளைகளைக் கொண்டு மது பானம் ,சிகரட் வாங்குவதைக் காணக்கூடியதாக உள்ளது. மேலும் வீடுகளில் மது அருந்துவது, சிகரட் புகைப்பது நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

எனவே இப்படியான குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் எப்படி நல்லொழுக்கத்தைப் பேண முடியும் என்பது கேள்விக் குறியாக உள்ளது. மேலும் சில தந்தைமார் கள் தான் மது அருந்துவதை மட்டுமல்லாமல் வீடு களுக்கு நண்பர்களையும் அழைத்து வந்து மது அருந்துவதை காணக்கூடியதாகவுள் ளது. இதனால் நவ்லொழுக்கம் மட்டுமல்லா மல் கலாசார சீரழிவுகளும் நடைபெறுகின் றது.

எனவே நல்லொழுக்கத்தை கடைப் பிடிக்க வேணுமாயின் முதலில் தாய் தந்தையர் நல்லொழுக்கத்தை பேண வேண்டும். பேணினால்தான் பிள்ளைகளும் பேணுவார்கள். ஆகவே நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் இந் நாளில் கேட்டுக்கொள்கிறது.

செ. குமாரசிங்கம் (ச.நீ)
செயலாளர்
வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம்

# பிரித்தானியாவின் ஆளும்கட்சி மாநாட்டில் இலங்கை அரசுக்கு எதிராக விமர்சனம்

மூன்று இலட்சம் தமிழ் மக்களை முட் கம்பி வேலிகளுக்குள் அடைத்துவைத்துள்ள இலங்கை அரசுக்கு பிரித்தானிய மக்களின் பணம் சென்றடையக்கூடாது என்று ஆளும் தொழிற்கட்சியின் வருடாந்த மாநாட்டில் கட்சியின் முன்னாள் கொறடாவும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிபோன் மக்டொனா அம்மையார் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

"Marks & Spencer" நிறுவனத்தில் ஒரு உள்ளாடையையோ, Next நிறுவனத்தில் மேலங்கியையோ அடுத்த தடவை நீங்கள் கொள்வனவு செய்யும் பொழுது, அல்லது இந்தியாவின் கடலோரத்தை அண்டியுள்ள அழகிய தீவிற்கு வாழ்நாள் பெறுமதி மிக்க விடுமுறையாக நீங்கள் செல்லும் பொழுது, மூன்று இலட்சம் மக்களை முட்கம்பி வேலிக் குள் அடைத்து வைத்துள்ள ஒரு அரசாங்கத் திற்கு உங்கள் பணம் சென்றடைய வேண் டும் என்று உண்மையில் நீங்கள் விரும்புகின் றீர்களா?

செய்தியாளராகக் கடமையாற்றுவதற்கு மிகவும் ஆபத்தான நாடு அது. இளம் ஆண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு, கட்டுப்பட்ட நிலையில் மிகவும் குறுகிய வீச் செல்லைக்குள் சுடப்படுவதை சனல் -4 தொலைக் காட்சிச் செய்தியில் நாம் பார்க்கக்கூடிய நாடு அது எமது பணத்திற்கும், ஜனநாயகத்திற்கும் இதனையா நாம் நாடி நிற்கின்றோம்?

உங்கள் பணத்தைதயவு செய்து சரியாகப் பயன்படுத்துங்கள். அந்த அரசாங்கத்தைத் தாங்கிப் பிடிப்பதற்கு பயன்படுத்தாதீர்கள் இவ்வாறு ஆளும் கட்சிநாடாளுமன்ற உறுப்பினர் சிபோன் அம்மையார் கூறியபொழுது, அவையில் அமர்ந்திருந்த அனைவரும் கரவொலி எழுப்பித் தமது ஆதரவை வெளிப் படுத்தினர். (ஓ-6)



இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி மேற்குப் பிரிவினரால் புற்றுநோயாளர்களுக்கான நிதி வழத்தை மேம்படுத்த வட்டு மத்திய கல்லூரியில் நடத்தப்பட்ட கலை விழாவில் ஆரம்ப நிகழ்வில் வலிமேற்கு செஞ்சிலுவைச்சங்க பிரிவுத் தலைவர் தி.உதயசூரியன் தலைமையுரை நிகழ்த்துவதையும் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்ட யாழ். கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் வலிமேற்கு பிரதேச செயலர் திருமதி தே.யாழ்.,இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ். மாவட்டக் கிளையின் உப தலைவர் வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராசா , யாழ். கிளையின் செயலாளர் கு.பாலகிருஸ்ணன் வட்டு மத்திய கல்லூரி அதி பர் ந.சபாரத்தின சிங்கி ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# சிலாபம் பகுதியில் தேடுதல் ; 10 தமிழர்கள் கைது

(கொழும்பு)

சிலாபம் நகரில் தரைப்படையினரும் பொலிஸாரும் நேற்று முன்தினம் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது 10 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை தொடக்கம் பிற்பகல் வரையில் இந்தத் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சிலாபம், நகரில் உள்ள வர்த்தக நிலை யங்கள் வீடுகள் என்பன படையினரால் சோதனையிடப்பட்டன.

சந்தேகத்துக்கு இடமான 10 பேர் இந்தத் தேடுதல் நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் தமது அடையாளத்தை உரிய முறையில் உறுதிப்படுத்தவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர். (ஓ-6)

# மீள் குடியேற்றத்தை விரைவுபடுத்துக

## இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த பொதுமக்களை மீள் குடியமர்த்தும் நடவடிக்கைகளில் விரைவான முன்னேற்றங்களைக் தாம் எதிர்பார்ப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தாம் இலங்கை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாக தெரிவித்துள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா, மக்கள் கலாச்சாரத் தன்மைக்கு ஏற்ப மீள் குடிய மர்த்தப்படவேண்டும் எனக் கோரியுள்ளார்.

இந்தநிலையில் குறித்த முனைப்புகளிற்கு இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியா உதவி அளிக்க தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்சமயம் இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு தேவையான அளவு வளங்களை வழங்கி வருவதாகவும் அந்த நட வடிக்கைகள் எதிர்காலத்தில் தொடரும் என வும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-14)

# நான்காம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 18 01 1944



மறைவு 19 09 2005

## அமரர் குமாரவேலு சுப்பிரமணியம்

(நாயகிஸ் புரடெக்ஸ் உரிமையாளர்)

அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எமது இல்லத்தின் பொறுப்பாய் இருந்தீரே. இன்முகம் காட்டி எல்லோருடனும் நேசமாய்ப் பழகி உற்ற நேரத்தில் உதவிகள் பல செய்து என்றும் நல்லவராய் இன்சொல் பேசி மகிழ்ந்தீரே. நான்கு ஆண்டென்ன ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் ஆறாது எம் துயரம் . உங்கள ஆத்மா சாந்தியடைய ஆண்டவனின் திருப்பாதங் களைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.


வட்டு.கிழக்கு
வட்டுக்கோட்டை.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள் ,
பேரப்பிள்ளைகள்.

(3720)

# உள்ளம் கவரும் ஓர் இனிய மொழி தமிழ்

## மகாத்மா காந்தி



தென் ஆபிரிக்காவில் காந்தியடிகள் இருந்த போது தமிழ் மொழியை கற்கத் தொடங்கினார். தமிழ் மொழியைக் கற்கும் போது அதன் அழகை அறியலானேன் என்று தமிழ் மொழி உள்ளம் கவரும் ஓர் இனிய மொழி என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழ் கற்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டதற்குக் காரணம் திருக்குறள். நான் திருக்குறளின் மூலத்தை நேராக கற்க வேண்டுமென ஆசைப்பட்டேன். இது எனது மனதில் ஆழமாகப் பதிந்தது. எனவே தமிழ் கற்கத் துவங்கினேன் என்றும் கூறியுள்ளார்.

இந்தியா ஒன்று படுவதற்கு தமிழர்கள் இந்திமொழியை கற்பது மட்டும் போதாது சென்னை ராஜ்யத்திற்கு வடக்கே உள்ளவர்களும் தமிழைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது காந்தியின் கருத்து. மகாத்மா என்னும் பட்டத்தை நான் மதிக்கவில்லை. பல சமயம் இப்பட்டம் எனக்கு மனத் துன்பத்தை தந்துள்ளது. எக்காலத்திலும் அப்பட்டத்தினால் நான் பெருமைப்பட்டுக்கொண்டதாக ஞாபகமில் லை. என்னை மகாத்மா எனக் கூறி பனிப் பாங்கான இமயமலையின் சிகரம் வரை ஏற்றி வைத்துவிட்டு இவ்வளவு மாபெரும் மகாத்மாவின் போதனைகளைப் பின்பற்றுவது என்ன முடிகிற காரியமா எனக் கூறி என் காலை வாரி விடப் பார்க்கிறீர்களா... பொருட்காட்சி சாலையில் வைத்துள்ள ஒரு ஜந்துவின் நிலையில் தான் உள்ளேன்.

இவ்வாறு காந்தி கூறியுள்ளார். மகாத்மா காந்திக்கு முதல் தபால் தலை வெளியிட்ட நாடு அமெரிக்கா. காந்தியடிகள் தபால் தலை மட்டுமே 142 நாடுகளில் வெளியிடப்பட்டது. ஏமன் நாடு இவருக்கு இரட்டை தபால் தலையை வெளியிட்டு கௌரவப்படுத்தியுள்ளது. (ஓ-6)

# பீகாரில் நக்சலைட்டுகள் கோரத் தாக்குதல்

## 7 குழந்தைகள் உட்பட 16 பேர் படுகொலை


(பாட்னா)

பீகார் மாநிலம் ககாரியா மாவட்டம் அமோசி கிராமத்தில் நக்சலைட்டுகள் கோரத் தாக்குதல்கள் நடத்தியுள்ளனர். இதில் ஏழு குழந்தைகள் உட்பட 16 பேர் பலியாகியுள்ளதால் அந்தக் கிராமமே சோகத்தில் மூழ்கியுள்ளது. அப்பாவி மக்களுக்கு நேர்ந்த வன்கொடுமை: வீடுகளில் இருந்த அப்பாவி மக்களை துப்பாக்கி முனையில் வெளியில் இழுத்துவந்தனர். நக்சலைட்டுகள் குழந்தைகளைக்கூட விட்டுவைக்கவில்லை.

அனைவரது கைகால்களையும் கட்டி இழுத்து வந்து மிகவும் கொடூரமான முறையில் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்துள்ளனர்.பகிரங்கமாக நடந்துள்ள இந்தச் சம்பவம் பீகார் முழுவதும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

காரணம் என்ன?: சர்ச்சைக்குரிய நிலத்தில் அமோசி மக்கள் விவசாயம் செய்ததால் தான் நக்சல்கள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது. இந்தச் சம்பவத்தில் இறந்த 7 பேரும் 10 இல் இருந்து 15 வயதுக்கு உட்பட்டவர்கள் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டுள்ளதாக பீகாரின் கூடுதல் இயக்குநர் ஜெனரல் நீலாமணி தெரிவித்துள்ளார்.இதுதொடர்பாக நக்சலைட்டுக்கள் தாக்குதலுக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ள பீகார் முதல்வர் நிதிஷ்குமார் குற்றவாளிகள் விரைவில் பிடிக்கப்படுவார்கள் எனத் தெரிவித்துள்ளார். மேலும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கு தலா 1.5 இலட்சம் ரூபாய் நிவாரண நிதி அளிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நக்சல்கள் தாக்குதலுக்கு தார்மீக பொறுப்பேற்று பீகார் முதல்வர் நிதிஷ்குமார் பதவிவிலக வேண்டும் என லோக் ஜனசக்தி தலைவர் ராம் விலாஸ் பாஸ்வான் வலியுறுத்தியுள்ளார். (ஓ-6)




# நடுக்கடலில் மீனவர்கள் மீது தாக்குதல்

## இலங்கை கடற்படையினர் அட்டகாசம்

மண்டபம் மீனவர்களை நடுக்கடலில் தாக்கிய இலங்கை கடற்படையினர் இறால் மீன்களை பறித்து விரட்டி அடித்தனர். இலங்கை கடற்படையைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த பல நாட்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

ஆனால், மண்டபம் மீனவர்கள் வழக்கம் போல் மீன்பிடிக்க கடலுக்குச் சென்று வருகின்றனர். அதன்படி கடந்த புதன்கிழமை மண்டபம் வடக்குக் கடல் பகுதியிலிருந்து 300க்கும் அதிகமான விசைப் படகுகளில் மீன் பிடிக்கச் சென்றனர்.

நடுக்கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களின் விசைப் படகுகள் மீது ரோந்துக் கப்பலை மோதச் செய்து சுற்றி வளைத்தனர்.படகுகளில் ஏறிய அவர்கள், ஐஸ் பட்டிகளை கடலில் தூக்கி வீசி, மீனவர்களைத் தாக்கினர். இறால் மீன்களைப் பறித்துக்கொண்டு விரட்டியடித்தனர். மீனவர்கள் கூறுகையில், இலங்கைக் கடற்படையின் அட்டகாசத்தால் கடல் தொழில் நசியும் நிலை உள்ளது.

இதை இங்குள்ள அரசியல் கட்சி கள் கண்டிப்பதால் அவர்களின் தாக்குதலும் தொடர்கிறது என்றனர். (ஓ-6)

# புதிய இயக்கம் தொடங்கும்

## தமிழருவி மணியன்

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு பிரிவின் பொதுச் செயலாளராக பதவிவகித்து பெப்ரவரி மாத இறுதிப் பகுதியில் விலகியவரும் ஈழத்தமிழர்களின் ஆதரவாளருமான ''தமிழருவி'' மணியன் புதிய இயக்கம் தொடங்குகிறார்.

புதிய இயக்கம் தொடங்குவது தொடர்பாக தமிழருவி மணியன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

" இது அரசியல் இயக்கம் அல்ல, எங்கள் இயக்கத்தின் கொடி வெள்ளை நிறத்தில் இருக்கும் அக் கொடியில் காவி வண்ணத்தில் வட்டமும், கைராட்டினமும் இருக்கும் என்றார். (ஓ-6)

# 16 நாட்களுக்குப் பின் இன்று கடலுக்குச் செல்லும் மீனவர்கள்

(இராமேஸ்வரம்)

இலங்கைக் கடற்படையினரின் நடவடிக்கையை கண்டித்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 16 நாட்களுக்குப் பின் இன்று கடலுக்குச் செல்கின்றனர். இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த 16இல் மீன்பிடிக்கச் சென்ற 21 மீனவர்களை படகுடன் இலங்கைக் கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்ததைத்தொடர்ந்து இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

மத்திய, மாநில அரசுகளின் நடவடிக்கையைத் தொடர்ந்து கடந்த 25 ஆம் திகதி சிறையில் அடைக்கப்பட்ட 21 மீனவர்களும் இலங்கை அரசால் விடுவிக்கப்பட்டு இராமேஸ்வரம் வந்து சேர்ந்தனர்.இதனால் மாவட்ட நிர்வாகம் வேலை நிறுத்தத்தை கைவிட்டு மீண்டும் கடலுக்குச் செல்ல மீனவர் சங்க பிரதிநிதிகளிடம் கூறினர்.

ஆனால் கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு பாதுகாப்பற்ற நிலை இருப்பதால் இலங்கைக் கடற்படையினரின் நடவடிக்கைக்கு நிரந்தர தீர்வு காணும் வரை கடலுக்குச் செல்ல மறுத்துவிட்டனர். இதனால் மீனவர்கள் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்த நிலையில் பல்வேறு அமைப்புக்களும், அரசியல் கட்சிகளும் ஆர்ப்பாட்டம், போராட்டங்களை நடத்தியபோது தே.மு.தி.க தலைவர் விஜகாந்த் தலைமையில் டில்லியில் மத்திய மாநில அரசுகளைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது.

ஆனால் மத்திய மாநில அரசுகளிடமிருந்து எந்தவித உத்தரவாதமும் அளிக்கப்படவில்லை. கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 30 நாட்களுக்கு மேலாக மீனவர்கள் கடலுக்குச் செல்லாததால் மீனவர் தொழிலாளர்கள் குடும்பங்கள் அன்றாட சாப்பாட்டுக்கே வழியில்லாமல் வட்டிக்குப் பணம் வாங்கும் நிலை ஏற்பட்டது.

இதனால் இலங்கைக் கடற்படையினர் தாக்கினாலும், கைது செய்தாலும் ,சுட்டாலும் ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்துள்ள மீனவர்கள் இன்று முதல் மீன்பிடிக்கச் செல்கின்றனர். நடுக்கடலில் இனிமேலும் இலங்கை கடற்படையினரின் தாக்குதல் , கைது நடவடிக்கைகள் தொடர்ந்தால் அதற்கு மத்திய, மாநில அரசுகளே பொறுப்பு எனக்கூறும் மீனவ சங்கப் பிரதிநிதிகள் தொடர்ந்தும் இந்நிலை நீடித்தால் அனைத் துக் கட்சிகள் மற்றும் மாநில அளவிலான அனைத்து அமைப்புக்களும் தங்கள் பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதனிடையே 16 நாட்களுக்குப் பின் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்வதால் வெளியூர்களுக்கு சென்றிருந்த மீனவர்கள் இராமேஸ்வரம் வரத் தொடங்கி யுள்ளனர்.படகு உரிமையாளர்களும் ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ஓ-6)

## தமிழ்நாட்டின்

# அரியலூரில் கல்லான நிலையில் டைனோசர் முட்டை கண்டுபிடிப்பு



தமிழ்நாட்டில் அரியலூர் அருகே உள்ள கிராமத்தில் கல்லான நிலையில் நூற்றுக் கணக்கான டைனோசர் முட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஆற்றுப்படுக்கை அருகே நிலவியல் விஞ்ஞானிகள் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டிருந்தபோது, குவியல் குவியலாக கல்லாகிய முட்டைகள் மண்ணாலான கூடுகளில் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

கல்லாகிய முட்டைகள் பார்ப்பதற்கு டைனோசர் முட்டைகள்போல இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இவை ஆறு கோடியே ஐம்பது இலட்சம் ஆண்டுகள் பழைமையானவையாக இருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொன்றும் ஒரு கால்பந்து அளவில் காணப்படும் இந்த முட்டைகள் சொரோபோட்ஸ் எனப்படும் கழுத்து நீண்ட தாவர உண்ணி டைனோசர் வகையைச் சேர்ந்தவை என்று ஆய்வுக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

டைனோசர் இனம் ஏன் அழிந்தது என்பது பற்றி கூடுதல் விபரம் அறிய இக் கண்டுபிடிப்பு உதவும் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை தெரிவித்தனர். (ஓ-6)

# முகாம்களைப் பார்வையிட எம்.பிக்கள் குழு

## மத்திய அரசு தீவிர ஆலோசனை

(புதுடில்லி)

முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் தமிழர்களின் நிலையை நேரில் கண்டறிவதற்காக பாராளுமன்ற எம்.பிக்கள் குழுவை இலங்கை அனுப்புவது தொடர்பாக மத்திய அரசு ஆராய்ந்து வருகிறது. பாதுகாப்பு விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவையின் ஆலோசனைக் கூட்டம் டில்லியில் பிரதமர் தலைமையில் நடைபெற்றது.

பிரதமர் மன்மோகன் சிங் உள்துறை அமைச்சர் சிதம்பரம், வெளியுறவுத் துறை அமைச்சர் கிருஷ்ணா, நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி, பாதுகாப்பு அமைச்சர் அந்தோணி மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் இலங்கை விவகாரம் குறித்து ஆராயப்பட்டது. இலங்கை முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் தமிழர்களின் நிலையை நேரில் கண்டறிய எம்.பிக்கள் குழுவை அனுப்ப வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டது.

இது விடயமாக இலங்கை அரசுடன் மத்திய அரசு தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்து வருவதாகக் தெரிகிறது. இரு தரப்பு அதிகாரிகளும் தொடர்ந்து பேசி வருவதாகவும் விரைவில் அதிகாரப்பூர்வ அறிவிப்பை மத்திய அரசு வெளியிடலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு நிரந்தர குடியுரிமை வழங்குவது குறித்தும் பரிசீலனை செய்யப்பட்டது. (ஓ-6)

கிழவன் இரண்டு காரியங்களில் இளைஞனாக இருக்கின்றான்; பணத்தாசை, வாழ்க்கையில் ஆசை.
– ஜேர்மன்

வலம்புரி

# சிதம்பரத்தின் சென்னை வருகை கலைஞரின் மற்றுமொரு தயாரிப்பா?

இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்திய மத்திய அரசின் நடவடிக்கை எதுவும் இல்லை என்ற முடிவுகள் ஏற்புடையவை. வன்னி யுத்தம் வெற்றி பெறுவதற்கு இலங்கை அரசுக்கு உதவிய இந்திய மத்திய அரசு யுத்தத்தின் பின்னரான ஈழத்தமிழர் நிலை குறித்து காத்திரமான நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும்.

எனினும் அதனை மத்திய அரசு செய்யத்தவறி விட்டது. இதற்காக தமிழர்களாகிய நாம் கவலைப்படுவதைத்தவிர வேறு எதனையும் செய்ய முடியாது.

இருந்தும் ஈழத்தமிழர் விடயத்தில் தமிழக உறவுகள் பெற்றுள்ள ஈடுபாடு காரணமாக இந்திய மத்திய அரசு ஏதேனும் செய்தாக வேண்டும் என்ற கட்டாயம் இருக்கின்றது.

அவ்வாறான கட்டாயத்தை இந்திய மத்திய அரசு உணர்ந்துள்ளதோ இல்லையோ தமிழகத்தின் முதல்வர் கலைஞர் கருணாநிதி அதனை நன்கு உணர்ந்துள்ளார்.

இதன் காரணமாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு இடையிடையே நினைவூட்டல் கடிதங்களை அவர் அனுப்பி வைத்து வருகிறார்.

தமிழகத்தில் இடைத் தேர்தல் வரும் காலத்தில் கலைஞர் அடிக்கடி கடிதம் எழுதுவதும் உண்டு. நிலைமை இதுவாக இருக்க கடிதம் எழுதினால் போதுமா என்று தமிழகத்தில் கேள்வி எழும். அதிலும் குறிப்பாக கலைஞர் ஏற்பாட்டில் ‘உலகத்தமிழர் மாநாடு’ நடத்த விருக்கும் காலத்தில் ஈழத்தமிழர் பற்றிய நினைப்புகள் கவலையை ஏற்படுத்தியுள்ளன.

மூன்று இலட்சம் ஈழத்தமிழர்களை இலங்கை அரசு முகாம்களில் தடுத்துவைத்திருக்கும் போது உலகத் தமிழர் மாநாடு எதற்கு என தமிழகத்தின் முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்தக்கேள்வி உலகத்தமிழர் மாநாட்டுக்கு குந்தகமாக அமைந்து விடும் எனக்கருதிய கலைஞர் கருணாநிதி அவசர அவசரமாக இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதியுள் ளார்.

கூடவே தி.மு.க., தமிழக காங்கிரஸ் இணைந்த குழுவை டெல்லிக்கு அனுப்பி பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்க வைத்தார்.

பாரத் ஸ்ருடியோவில் படம் எடுப்பதற்கு கதிரையில் இருந்தது போல பிரதமர் மன்மோகன் சிங் கதிரையில் ஆடாமல் அசையாமல் இருக்க தயாநிதி மாறன் போன்றவர்கள் ஈழத்தமிழர்பற்றி ஏதே கூறியுள்ளனர். பிரதமர் மன்மோகன் சிங் வாய்திறக்கவில்லை.

ஆனாலும் சந்திப்பை முடித்துவந்த குழுவினர், இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவை இலங்கைக்கு அனுப்பி முகாம்களில் அடைபட்டுள்ள மக்களின் அவல நிலையை அறிவதற்கான ஒழுங்குகளை செய்வதாக பிரதமர் மன்மோகன் சிங் கூறியதாக பரப்புரை செய்தனர்.

செல்வி ஜெயலலிதாவின் எதிர்ப்பை முறியடித்து உலகத்தமிழர் மாநாட்டை சிறப்பாக நடத்துவதற்கு கலைஞர் தீட்டிய திட்டம் அரங்கேறுகிறது.

இதில் தயாநிதிமாறன், மூப்பனாரின் மகன் வாசன், தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு ஆகியோர் நடிக்கின்றனர். நாடகமும் நடிப்பும் சிறப்பாக இருந்தாலும் விளம்பரமும் வேண்டும் அல்லவா? அதற்காக இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், கலைஞர் கருணாநிதியை சந்திப்பதற்காக சென்னை வரவுள்ளார்.

ப.சிதம்பரம் சென்னை வருவதும் அவர் தமிழக முதல்வர் கருணாநிதியை சந்திப்பதும் அதனால் ஈழத்தமிழருக்கு விமோசனம் ஏற்படும் என எதிர்பார்ப்பதும் அபத்தமானவை .

இருந்தும் கலைஞரின் கதைவசனமும் சன் தொலைக்காட்சி செய்தி அறிவிப்பும், அட கலைஞர் விசுவாசமாகத்தான் ஈழத்தமிழர் நாடகத்தை அரங்கேற்றுகிறார் என நம்பச் செய்கிறது.

என்ன செய்வது! பேதலித்த மனம் உலகத்தமிழர் மாநாட்டுக்காக கலைஞர் போடும் நாடகத்தை கண்டு களிக்கும் துரதிர்ஷ்டத்தில் நாங்கள்.

எதுவாயினும் உலகநாடுகள் ஈழத்தமிழர் விடயத்தில் கரிசனைகாட்ட தொடங்கி உள்ளன. இது இலங்கைப் பொருளாதாரத்தில் பேரிடியாக விழும். அப்போது இலங்கை அரசு தன்னை மாற்றிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும்.

இதற்கிடையில் நல்லதை செய்ய முடிந்தால் கலைஞர் கருணாநிதி செய்யட்டும்.

# 180 நாட்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளல் சம்பந்தமான நடமாடும் சேவைகள் 6ஆம் திகதி ஆரம்பம்

வடக்கின் வசந்தம் 180 நாட்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளல் சம்பந்தமாக பிரதேச செயலாளர் , அலுவலக அலுவலகர்களுக் கான அறிவுறுத்தும் செயல் அமர்வு மற்றும் கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும் பொதுமக்களுக்கான நடமாடும் சேவைகள் எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் பிரதேச ரீதியாக நடாத்தப்படவுள்ளன.

இதில் கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகங்கள் மருதங்கேணி உதவி அரசாங்கப் அதிபர் பணிமனை ஆகியவற்றுக்கான நடமாடும் சேவை எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கரவெட்டிப் பிரதேச செயலகத்திலும் , கோப்பாய் தெல்லிப்பளை பிரதேச செயலகங்களுக்கானவை 7ஆம் திகதி புதன் கிழமை கோப்பாய் பிரதேச செயலகத்திலும் சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலகங்கள், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஆகியவற்றுக்கானவை ,8ஆம் திகதி வியாழக்கிழமை பிரதேச செயலகத்திலும் நடை பெறவுள்ளன.

மேலும் யாழ்ப்பாணம், நல்லூர், உடுவில் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றுக்கானவை எதிர்வரும் 20ஆம் திகதி யாழ்ப்பாண பிரதேச செயலகத்திலும் வேலணை பிரதேச செயலகம், நெடுந்தீவு, ஊர்காவற்றுறை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கானவை 21ஆம் திகதி வேலணைப் பிரதேச செயலகத்திலும் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கானது 22ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வில் யாழ். மாவட்ட மக்களுக்கான கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளல் தொடர்பான செயற்பாடுகளும் வெளிநாடுகளிலும் பிறந்து தற்போது இலங்கையில் வதியும் பிராஜாவுரிமை பெற்றுக்கொள்ளப்படாதவர்கள் இதனைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான செயற்பாடுகளும் நடைபெறவுள்ளன.

எனவே இதற்காக தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள் இதில் கலந்துகொள்வதுடன் , உரிய பிரதேச செயலக, உதவி அரசாங்க அதிபர் பணிமனை பிரிவுக்குட்பட்ட மக்களும் கலந்துகொண்டு தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதுடன் , நடமாடும் சேவையின் உச்சப் பயனைப் பெற் றுக்கொள்ளுமாறும் யாழ். அரசாங்க அதிபர் க.கணேஷ் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

# தேர்தல்கள் சட்டத்தில் திருத்தங்கள் அவசியம்

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

சுவரொட்டிகளை ஒட்டாமல், பதாதைகளை அமைக்காமல் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது என்பதனால் தற்போதுள்ள தேர்தல்கள் சட்டத்தில் திருத்தங்கள் தேவையொன்று ஊடக மற்றும் தகவல் தொழிற்நுட்ப அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

தேர்தல்கள் சட்டத்திட்டத்தின் பிரகாரம் வேட்பாளர் வீட்டக்கு வீடு செல்ல முடியாது , உறவினர்களின் வீடுகளுக்கு கூடச் செல்ல இயலாது அவ்வாறு தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் முடியாது. பிரசார நடவடிக்கைகள் தற்போதுள்ள சட்ட திட்டங்களுக்கு அமைவாக மேற்கொள்ள வேண்டும். அதற்காக கை கால்களை கட்டிக்கொண்டு நீந்த இயலாது என்றார். (ஓ-6)

# மீள் குடியமர்த்தப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கான உதவிகள்

நலன்புரி முகாம்களில் இருந்து மீள் குடியமர்த்தப்பட்டவர்களில் கடற்தொழிலாளர்களுக்கு கடல் தொழில் சார் உதவிகளை வழங்க அரச சார்பற்ற நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளதாக கடற்தொழில் நீரியல் வள அமைச்சின் யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் க.தர்மலிங்கம் தெரிவித்துள்ளார்.

நலன்புரி முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டு மீள் குடியமர்த்தப்பட்டவர்களினதும் கடற்தொழிலை மேம்படுத்தும் நோக்கிலும் அவர்களின் பிரதேச வளங்களுக்கு ஏற்ப எவ்வகையான மேற்கொள்ள முடியும் என சில அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து கலந்தாலோசிக்கப்பட்டு இத் திட்டத்திற்கான அறிக்கை சமர்ப்பிக்கப் படவுள்ளது. இதன்பின்னர் அவர்களுக்கான உதவிகள் மிகவிரைவில் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (7)

# பரிசுத் தினம்

டச்சு வீதி இருபாலையில் அமைந்துள்ள மதுரம் இன்ஸ்ரிரியூட்டின் பரிசுத்தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நிர்வாக இயக்குநர் எஸ்.கே. கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார். தொடர்ந்து 2008இல் க.பொ.த. சாதாரணம் க.பொ. உயர்தரம் மற்றும் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைகளில் அதி உயர் பெறுபேறுகளைப்பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஓ)

# இலவச பாடநூல் விநியோகத்தின் ஆரம்ப வைபவம் வேம்படியில்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல் விநியோகத்தின் அடுத்த வருடத்திற்கான ஆரம்ப் வைபவத்தை யாழ். வேம்படி மகளிர் மகாவித்தியாலத்தில் நடத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக பிரதிக்கல்வி அமைச்சர் எம்.சச்சிதானந்தன் தெரிவித்தார்.

பிரதிக்கல்வி அமைச்சரின் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் இன்று காணப்படுகின்ற அமைதியான சூழல் காரணமாக ஏறக்குறைய 28ஆண்டுகளின் பின் ஏ-9 யூடாக மாணவர்களுக்கான இலவச பாடநூல்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் கடல் மார்க்கமாக பாரிய போக்குவரத்துச்செலவுடன் யாழ்ப்பாணத்திற்கு பாடப்புத்தகங்கள் அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மனிதன் ஆற்றல்கள்



உலகிலுள்ள அறிவு அனைத்தையும் மனதின் ஆற்றல்களை ஒரு முகப்படுத்துவதைத் தவிர வேறு எந்த வகையால் மக்கள் பெற்றிருக்கிறார்கள். மூடப்பட்டுள்ள கதவை எப்படித் தட்ட வேண்டும். எப்படித் தேவையான படி தாக்கவேண்டும் என்பது மட்டும் நமக்குத் தெரிந்தால் உலகம் தனது இரகசியங்களை வெளியிடத் தயாராக இருக்கிறது.

அத்தகைய வலிமையும் தாக்கும் வேகமும் மனதை ஒரு முகப்படுத்துவதன் மூலம் தான் கிட்டுகிறது. மனித உள்ளத்தின் ஆற்றலுக்கு ஓர் எல்லையே இல்லை.

மனது அதிகமாக ஒருமுகப்படப்பட அதன் ஆற்றல் அதிகமாக ஓர் இடத்தில் செலுத்தப்படுகிறது. இதுதான் மனதின் ஆற்றலைப் பற்றிய இரகசியமாகும்.

# இந்தோனேஷியாவில்

## மீண்டும் பூகம்பம் ஏற்படும் என்ற பீதி மக்களை ஆற்றுப்படுத்த முடியாமல் அரசு தவிப்பு

இந்தோனேசியாவில் உள்ள சுமத்ரா தீவு கடலோரத்தில் கடந்த புதன்கிழமை காலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் சுமத்ரா தீவில் உள்ள பதாங் நகரம் அழிந்தது. அந்த நகரில் இருந்த கட்டடங்கள் எல்லாம் சீட்டுக்கட்டுக்கள் சரிந்ததுபோல சரிந்து நொருங்கிக் கிடக்கின்றன. கட்டட இடிபாடுகளில் சிக்கி 1100க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு வரை 777 பேரின் உடலங்கள் மீட்கப்பட்டன.300பேர் படுகாயங்களுடன் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். பதாங் நகரில் இருந்த சுமார் 500 உயர்ந்த கட்டடங்களும் இடிந்து தகர்ந்து கிடக்கின்றன.கடந்த இரண்டு நாட்களாக பலத்த மழை பெய்வதால் மீட்புப் பணிகள் மெல்ல நடந்து வருகின்றன. இந்தக் கட்டட இடிபாடுகளில் ஆயிரக்கணக்கானவர்கள் சிக்கிக் கிடக்கின்றனர். எனவே நில நடுக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை அதிகளவில் உயரக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது. பதாங் நகரில் நேற்றுமுன்தினம் இரண்டாவது தடவையாக பூகம்பம் ஏற்பட்டது. அப்போதும் கட்டடங்கள் இடிந்து விழுந்தன. இதனால் பீதி அடைந்த மக்கள் குடும்பம் குடும்பமாக கார்களில் வெளியேறியபடி உள்ளனர். வீதிகளில் வாகன நெருக்கடி ஏற்பட்டிருப்பதால் அம்புலன்ஸில் உடல்களை ஏற்றிச் செல்லும் மீட்புப் பணிகளில் இடையூறு ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே மீட்புப் பணிகள் செய்வதற்கான கருவிகள் போதுமான அளவிற்கு இல்லையென்பதால் மீட்புப் படையினரிடம் சோர்வு ஏற்பட்டுள்ளது.இடிந்து கிடக்கும் பல கட்டடங்களில் இருந்து காப்பாற்றுமாறு கூக்குரல்கள் கேட்டபடி உள்ளன. ஆனால் கொங்றீற் தூண்களை விரைந்து அகற்ற இந்தோனேஷியா.போதுமான உபகரணங்கள் இல்லாமல் திணறியபடி உள்ளது. பள்ளிகள், நட்



சத்திர ஹோட்டல்கள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் என மக்கள் அதிகம் வசிக்கும் கட்டடங்கள் நொருங்கி கல் குவியல் போலக் கிடக்கின்றன. உயிர் தப்பிய உறவினர்கள் கண்ணீர் மல்க அந்தக் கட்டட இடிபாடுகள் அருகே சோகமாக நிற்கின்றனர்.

இடிபாடுகளை முழுமையாக அகற்ற இன்னும் சில தினங்களாகலாம் என்று தெரிகிறது. அமெரிக்கா, ஜப்பான் உட்பட சில நாடுகளில் இருந்து சுமாத்ரா தீவுக்கு மீட்புப் படையினர் சென்றுள்ளனர்.இதற்கிடையே பதாங் நகரில் சிதறிக் கிடக்கும் இடிபாடுகளில் துர்நாற்றம் வீசத்தொடங்கியுள்ளது. கட்டட இடிபாடுகளில் சிக்கி பிணமாக கிடப்பவர்களின் உடல்கள் அழுகி விட்டதால் அங்கு நோய் பரவும்அபாயம் ஏற்பட்டுள்ளது.

பதாங் நகரை அடுத்தடுத்து இரண்டு தடவை பூகம்பம் தாக்கியுள்ளதால் மீண்டும் பூகம்பம் வரக்கூடுமென்று மக்களிடம் பீதி ஏற்பட்டுள்ளது. உயிரிழந்த உறவினர்களின் உடல்களைக் கூட வாங்காமல் பலர் பதாங் நகரை விட்டு வெளியேறிவிட்டனர்.

மக்களிடம் ஏற்பட்டுள்ள பீதி காரணமாக பதாங் நகரில் பல பகுதிகளில் குழப்பம் நீடிக்கிறது. கண்ணீரும், கம்பலையுமாக உள்ள மக்களை ஆறுதல்படுத்த இயலாமல் இந்தோனேஷிய அரசு தவிக்கிறது.(ஓ-6)

## ஜி 7 நிதியமைச்சர்கள் மாநாடு இன்று இஸ்தான்புல்லில்

(டோக்கியோ)

தொழில் வளம் மிக்க 7 நாடுகளின் நிதியமைச்சர்கள் மாநாடு துருக்கியில் உள்ள இஸ்தான்புல் நகரில் இன்று சனிக்கிழமை நடைபெறுகிறது.

இதில் அமெரிக்கா, பிரிட்டன், கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் உள் ளிட்ட நாடுகளைச் சேர்ந்த நிதியமைச்சர்கள் பங்கேற்கின்றனர்.




இம் மாநாட்டில் சமீபத்தில் பிட்ஸ்பார்க்கில் முடிபடைந்த ஜி -20 நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் எட்டப்பட்ட முடிபுகளைச் செயல் படுத்துவது குறித்து ஆராயப்படவுள்ளது. (ஓ-6)

## சர்வதேச நாணய சபையின் பணிப்பாளர் மீது காலணி வீச்சு

(இஸ்தான்புல்)

துருக்கியின் தலைநகரான இஸ்தான்புல்லில் பல்கலைக்கழகம் ஒன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகாநாடு ஒன்றில் கலந்து கொண்ட சர்வதேச நாணய சபையின் பணிப்பாளர் டொமினிக் ஸ்ரோஸ்- கான் மீது ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் தமது காலணிகளில் ஒன்றை கழற்றி வீசியுள்ளார்.

எனினும் காலணி ஸ்ரோஸ் -கானை தாக்கலில்லை -காலணி வீசிய நபர் அதிகாரிகளால் மடக்கி பிடிக்கப்பட்டு மாகநாட்டு மண்டபத்திலிருந்து அகற்றப்பட்டார். (ஓ-6)

## ஈரானின் அணுசக்தி தொடர்பாக முக்கிய பேச்சுவார்த்தை

## ஜெனிவாவில் ஆரம்பம்

ஈரானின் சர்ச்சைக்குரிய அணுசக்தி விவகாரம் தொடர்பான முக்கியத்துவம் மிக்க பேச்சுவார்த்தைகள் நேற்று முன்தினம் ஜெனிவா



வில் ஆரம்பமாகின.

பிரித்தானிய, சீனா, பிரான்ஸ், ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகிய ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகளதும் மற்றும் ஜேர்மனியினதும் பிரதிநிதிகளும் ஈரானிய பிரதி நிதிகளும் இந்த பேச்சுவார்த்தைகளில் பங்கேற்றனர்.

முதல் நாள் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் ஒத்துழைக்க ஈரான் தவறியுள்ளதாக ஜேர்மனி தெரிவித்தது.

ஈரானானது தனது இரண்டாவது அணுசக்தி நிலையம் தொடர்பான இரகசியத்தை மறைத்து சட்டத்திற்கு புறம்பான வகையில் நடந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் அணுசக்தி கண்காணிப்பகம் குற்றம் சாட்டியுள்ளது.

யுரேனியம் செறிவூட்டல் நிலையத்தை நிர்மாணிக்க தீர்மானித்த தினத்தில் அது தொடர்பில் ஈரான் எமக்கு அறிவித்திருக்க வேண்டும். ஆனால் அது அவ்வாறு செய்யவில்லை என சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத் தின் தலைவர் மொஹமட் எல்பரடேயி தெரிவித்தார். ஜெனிவா பேச்சுவார்த்தை குறித்து ஈரா னிய ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மடி நஜாத் குறிப்பிடுகையில், ஜெனிவா கலந்துரையாடல் ஓர் வாய்ப்பாகவும் ஓர் பரீட்சையாகவும் உள்ளதாக குறிப்பிட்டார்.

மேற்குலக நாடுகளுக்கு உலகளாவிய ரீதியிலான தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவும் ஏனைய நாடுகளைக் கையாளும் வழி முறையை திருத்திக்கொள்ளவும் இது ஓர் சந்தர்ப்பமாக அமைகிறது என்று கூறினார். (ஓ-6)

## பிரிட்டனில் உச்சநீதிமன்றம் நடைமுறைக்கு வருகிறது

ஐக்கிய ராஜ்ஜியத்தில் பெரும் பான்மையான வழக்குகளில் உச்ச மேன்முறையீட்டு நீதிமன்றமாக செயல்படும் ஹவுஸ் ஒஃப் லார்ட்ஸ் என்ற பிரபுக்கள் சபையின் நடைமுறை முடிவுக்கு வருகிறது.

நாட்டில் புதிதாக அமைக்கப்படுகின்ற உச்ச நீதிமன்றத்துக்கான உறுப்பினர்கள் லண்டனில் நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

கிட்டத்தட்ட ஆறு நூற்றாண்டுகளாக பிரிட்டனின் உச்ச நீதிமன்றமாக பரிணமித்து வந்த பிரபுகள்கள் சபையின் நீதித்துறை செயற்பாடுகளும் அதிகாரங்களும் இனி முற்றுப் பெறும்.


ஐக்கிய ராஜ்ஜியத்தில் நீதிமன்ற நடைமுறைகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாக விருக்கும் முதல் நீதிமன்றம் இந்த புதிய உச்ச நீதிமன்றமாகத்தான் இருக்கும்.

நீதித்துறையானது அரசாங்கத்தின் ஏனைய பிரிவுகளைச் சார்ந்தில்லாது சுயாதீனமாக விளங்க வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தும் வகையில் இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

ஐக்கிய ராஜ்ஜியத்தில் சிவில் வழக்குகளைப் பொறுத்தவரை உச்சபட்ச மேன் முறையீட்டு நீதிமன்றமாக இனி இந்த புதிய உச்ச நீதிமன்றம் திகழும் .ஆனால் கிரிமினல் வழக்குகளைப் பொறுத்தவரை ஸ்காட்லாந்தில் வேறொரு மேன்முறையீட்டு கட்டமைப்புசெயல்படும்.

பிரிட்டனிலே பிரபுக்கள் சபை 1399 ஆம் ஆண்டிலிருந்து ஏதோ ஒரு வகையில் மேன் முறையீட்டு நீதிமன்றமாக செயல்பட்டு வந்துள்ளது. (ஓ-6)

## 600 தொன் எடையில் உலகிலேயே மிகப் பெரிய வீடியோ திரை



உலகிலேயே மிகப் பெரிய அதி துல்லியத்துடன் கூடிய வீடியோ திரை அமெரிக்க தலாஸ் கவ்போய் உதைபந்தாட்ட மைதானத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

11.400 சதுர அடி மேற்பரப்பைக் கொண்ட இத்திரை உலகிலேயே மிகப் பெரிய திரையாக கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடிக்கவுள்ளது.

இந்த வீடியோ திரையின் நிறை 6தென்காளாகும். (ஓ-6)

## சீனாவில் வேலைக்கு குவியும் வெளிநாட்டு இளைஞர்கள்

(பீஜிங்)

உலக பொருளாதார நெருக்கடியால், பல வெளிநாடுகளைச்சேர்ந்த இளைஞர்கள் வேலை தேடி,சீனாவிற்கு படையெடுக்கத் தொடங்கியுள்ளனர்.

அமெரிக்கா,ஐரோப்பா மற்றும் சில ஆசிய நாடுகளில், பொருளாதார நெருக்கடியால், வேலை வாய்ப்புக்கள் குறைந்து காணப்படுகிறது.

எனவே, வெளிநாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள், வேலை தேடி சீனாவிற்கு செல்லத் தொடங்கி உள்ளனர். இவர்கள் ஆங்கிலம் கற்பிப்பது, கணனி மற்றும் நிதி உட்பட பல்வேறு துறைகளில் பணியாற்றுகின்றனர்.

மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது, சீனாவில் அதிக வேலைவாய்ப்பு நிறைந்துள்ளதாக சீனா மற்றும் ஹாங்காங் ஆகிய பகுதிகளில் உள்ள எம்.ஆர்.சீன குழுமத்தின் மேலாளர் கிரிஸ் வாட்கின்ஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து,சீனாவில் பணியாற்றும் கார்னல் பல்கலைக்கழக பட்டதாரியான ஆன்ட்ரூ கார் என்பவர் கூறுகையில், வேலை வாய்ப்பைப் பொறுத்தவரை, சீனா மிகவும் பாதுகாப்பான இடம். என்னுடன் படித்தவர்களுக்கு வால்ஸ்ட்ரீட் பகுதியில் வேலைகள் கிடைத்தன. ஆனால், பொருளாதார நெருக்கடி காரணமாக, அவர்கள் வேலை இழந்துள்ளனர்.

அவர்கள் அமெரிக்காவிலேயே தங்கியிருந்து, கிடைத்த வேலைகளை செய்து வருகின்றனர் என்றார்.சீனாவில் ஒன்று அல்லது இரண்டாண்டுகள் வேலை பார்ப்பதால் கிடைக்கும் அனுபவமே மீண்டும் அமெரிக்கா சென்று பணியாற்ற உதவப் போவதாக சீனாவைச்சேர்ந்த மார்கெட் ரிசர்ச் குரூப் பின் மேலாண்மை இயக்குநர் ஷான் ரீன் கருத்துத் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## கிரிக்கெட் ஒஸ்கார் - 2009

# டில்சான், தோனி, காம்பீர், ஜோன்ஸனுக்கு சிறந்த வீரர்களுக்கான ஐ.சி.சி. விருது

(ஜோகனஸ்பேர்க்)

கிரிக்கெட் ஒஸ்கார் எனப்படும் ஐ.சி.சி விருதுகள் நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவின் ஜோகனஸ்பேர்க்கில் நடந்த கோலாகல விழாவில் வழங்கப்பட்டது.

விருதுக்கான வீரர்கள் பட்டியலை மேற்கிந்திய ஜாம்பவான் கிளைவ் லொய்ட் தலைமையிலான 5 பேர் குழு தேர்வு செய்தது. அதில் இந்தியாவின் அனில் கும்ளே, இங்கிலாந்தின் பாப் ரெய்லர், பாகிஸ்தானின் முடாசர் நாஸர், நியூசிலாந்தின் ஸ்டீபன் பிளமிங் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

2008 ஆகஸ்ட் 13ஆம் திகதி முதல் இந்த ஆண்டு ஆகஸ்ட் 24ஆம் திகதி வரை நடந்த போட்டிகள் விருதுக்கு கணக்கில் எடுத்து கொள்ளப்பட்டது.

இதில் ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரராக அவுஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் மைக்கல் ஜோன்சன் தெரிவானார்.

சர்வதேச சிறந்த கிரிக்கெட் வீரர் விருதை



இந்திய அணித்தலைவர் மகேந்திர சிங் தோனி தொடர்ந்து இரண்டாவது முறையாக பெற்றுக்கொண்டார். அவர் இந்த ஆண்டு 24 போட்டிகளில் 967 ஓட்டங்களை பெற்றுள்ளார்.

அதேபோல் இந்த ஆண்டுக்கான ஐ.சி.சி டெஸ்ட் மற்றும் ஒரு நாள் அணிகளின் அணித்தலைவராக தோனி தேர்வு செய்யப்பட்டுள்ளார். மேலும் இரண்டு பட்டியல்களிலும் தலா மூன்று இந்தியர்கள் டெஸ்ட் போட்டியில் காம்பீரும் ஒரு நாள் அணியில் சேவாக், யுவராஜும் இடம்பிடித்துள்ளனர். டெஸ்ட் அணியில் 12 ஆவது வீரராக ஹர்பஜன் இடம் பிடித்துள்ளார்.

சிறந்த டெஸ்ட் வீரருக்கான விருதினை இந்திய அணியின் கௌதம் காம்பீர் பெற்றுக் கொண்டார். ஆண்டின் சிறந்த இருபது-20 கிரிக்கெட் போட்டிக்கான விருதை இலங்கை வீரர் திலகரட்ன டில்ஷான் பெற்றார்.

கடந்த இருபது-20 உலக கோப்பைப் போட்டியின் அரையிறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக 57 பந்துகளில் 96 ஓட்டங்கள் விளாசியது அவருக்கு இந்த விருதை பெற்றுத் தந்தது.

வளர்ந்து வரும் வீரருக்கான விருதுக்கு அவுஸ்திரேலியாவின் 24 வயதான வேகப் பந்து வீச்சாளர் பீட்டல் சிடில் தேர்வு செய்யப்பட்டார். கடந்த ஆண்டு இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகம் ஆன சிடில் 12 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 49 விக்கெட்டுக்கள் கைப்பற்றி இருக்கிறார்.

விளையாட்டு உணர்வுடன் ஆடியதற்கான உத்வேக அணிக்கான விருதினை நியூசிலாந்து அணி தட்டிச்சென்றது.

# ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை பாடசாலைகளின் முன்னணிப் பெறுபேறுகள்

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

லி. கீர்த்தனா (157), டே.டொறின் மேசி (151), ர.அபிராமி (149), ம.றஞ்சன் அஜந்தன் (148), பா.பவதாரணி (147), அ.கௌசிகா (145), ஸ்ரீ.வர்சிகா (146), ர.தஜிகன் (146), வி.பிரணவன் (144), ஜீ.சுஜீபன் (143), இ.அருண்மயூரன் (142), சி.மதுரங்கன் (141), ர.தர்சிகா (141).

**திருநெல்வேலி இந்துதமிழ் கலவன் பாடசாலை**

அ.அன்புச்செல்வன் (173), ஜே.அருண்ராஜ் (169), கு.பிரதீஸ் (147).

இப்பாடசாலையில் இருந்து 37 மாணவர்கள் தோற்றியுள்ளதுடன் 15 மாணவர்கள் [illegible]0 புள்ளிகளுக்கு மேல் பெற் றுள்ளனர்.

**யாழ். ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்**

ச.கலைச்செல்வன் (179) (மாவட்ட நிலை-08, இ.பிரபஞ்சன் (165), க.பிரகலாதன் (164), கு.அஜிலவன் (158), ச.சிறிசிந்துஜன் (157), கு.அட்சரன் (154), இ.பிரிதிகா (151), ரா.அபிராஜ் (150), தி.கபிலன் (147), ஜெ. அஜீர்சன் (146), ச.சாலுஜன் (146), ந.ஐங்கரன் (145), சு.அரிகரன் (145), ச.அமிர்தவர்சினி (145), கி.டக்ஷலன் (141), ப.மதுசன் (141), ச.கஜானி (141).

**கோப்பாய் தெற்கு றோ.க.த.க.**

சே.ஹனிராஜ் (149).

**ஸ்கந்தவரோதயாக் கல்லூரி**

ச.சபிதன் (178), கு.கீர்த்தனா (161), அ.நிருஷா (144), வி.தனுஜன் (142), ப.துவாரகா (140).

இப்பாடசாலையில் இருந்து 31 மாணவர்கள் தோற்றியுள்ளதுடன் 13 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

**யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை**

எஸ்.செந்தூரா (185), எஸ்.யுவேதா (181), எஸ்.சதுர்த்திகா (180), ஜி.தேவந்தி (179), என்.பிருந்தாபரன் (177), ஆர்.தாக்சாயினி (177), எஸ்.கீதாசபா (177), வி.தனுஷா (174), ரி.துவா ரகா (172), ஆர்.ஜெயனீசன் (171), கே.தர்மிகன் (169),

கே.யதுசனா (169), வி.வத்சங்கீதசர்மா (169), ஏ.கேசவி (169), எம்.சாத்வீகன் (169), ஏ.சங்கீதன் (167), சி.நிருசன் (167), எஸ்.அபிராமி (167), எஸ்.சிவானுஜன் (167), எஸ்.பிரணவன் (166), பி.சங்கீர்த்தன் (166), பி.சாம்பவி (165), வி.தனுஜன் (165), எஸ்.சரண்யாசர்மா (164), எஸ்.சாய்சங்கர் (163), ஆர்.வித்தாகன் (163), எஸ்.பவதாங்கினி (163), எஸ்.கஜிதா (163), வி.சனந்தன் (163), கே.தினுகா (162), கே.வைஷ்ணவி (162), ஏ.சாம்பவி (162), ஜெ.கௌரிசங்கர் (162),

ஆர். ஸரெலின்டினோசன் (162), பி.துசைனி (162), ஆர்.றொய்னிசன் (161), யு.பவித்ரா (161), வி.அட்சகன் (160), ரி.மயூரன் (160), ரி.கஜானனன் (160), எஸ்.அபிநயா (160), கே.பிரியங்கன் (160), பி.மதுஷா (160), ஆர்.ஜனார்த்தனன் (159), பி.யதுநந்தனசர்மா (157), எ.சம்ஜேஎல்ரேரோஜன் (157),

டபிள்யூ.சிறிகஜன் (157), பி.ரிசாந்தி (157), எஸ். துலக்ஷிகன் (156), ஜே.துலக்ஷிகா (156), பி.பிரியதர்சனா (156) எஸ்.நிலக்ஷன் (155), எம்.கோபனன் (155), இ.பவித்ரா (155), எ. கெள்தமன் (155), எ.சிந்தூரி (155), எஸ்.ருசித்திலா (155), வி. கோபிகா (155), பி.ஜீவலக்சி (154), எஸ்.விதுஷன் (154), என்.மதுராங்கனி (154), சி.ஐங்கரன் (153),

வி.வானுகா (153), கே.சங்கவி (153), எ.சிவபிரியன் (152), ஆர். சிறிராம் (152), எஸ்.கஜானன் (152), பி.சந்தோஷ் (152), பி.பவதர்சினி (152), த.தர்மிகன் (152), ர.கஜானன் (152), சோ.கௌசிகன் (152), வ.ஜனுஜா (15 2), த.பகலவன் (151), ல.ராஜ்காந் (151), லோ.சஞ்ஜீவன் (151), மா.டானுஜா (151), சு.சர்மிலன் (150) கோ.ஜெயசாலினி (150), அ.குருலக்ஷன் (150),

கு.ஜனார்த்தனா (150), ஜெ.கிரிதகணேசன் (149), க.வர்தினி (149), சி.சஜிதா (149), ம.சுவேகா (149), ச.ஜதுகுலன் (149), ந.லோகிதா (148), ர.ஜதுர்ஷகன் (148), கி.சமகிர்தன் (147), ச.நிதர்சனா (147),

கு.எழினி (147), கு.உமாசங்கர் (147), ச.விதுஷன் (146), ர.கம்ஷாயினி (145), சி.தனேசன் (144), சி.சங்கீர்தன் (144), சு.துவாரகி (144), நி.தேனுகா (144), க.அனோஜன் (144), ம.நிருஷிகன் (144), கே.கீர்த்தனா (144), ம.கஜகிருஸ்ணா (143),

ச.இராகுலன் (143), ஆ.ஜனுஷன் (142), நா.கேஷிகா (142), ஜெ.சுவர்ணரஜி (142), அ.சங்கீர்த்தனன் (141), இ.சுஜந்தன் (141), சி.சஜீவன் (141), சு.செழியன் (141), அ.சங்கவன் (141), ச. பிரதீபன் (140), ச.பிரேமலக்ஷன் (140), த.பிரநீதா (140), வி.பானுஜன் (140), கே.தனராகவி (140).

இப் பாடசாலையிலிருந்து 218 மாணவர்கள் தோற்றியதுடன் 84 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். (ச-5)

# யாழ்ப்பாண உற்பத்திப் பொருள்களை அனைத்து லொறிகளிலும் ஏற்ற வேண்டும்

## யாழ்.வணிகர் கழகம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் உற்பத்திப் பொருள்கள் யாழ்ப்பாணத்திலிருந்து தென் பகுதிக்குச் செல்லும் லொறிகள் அனைத்திலும் கொண்டு செல்லப்பட வேண்டும் என யாழ்ப்பாண வணி கர் சங்கம், வட மேல் மாகாண வர்த்தகர் சம்மேளனத்திடம் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

யாழ்.மாவட்டத்தின் கைத்தொழில்களையும் பொருளாதாரத்தையும் வளப்படுத்தல் ரீதியாக ஐ.எம்.வி. கைத்தொழில் சேவைகள் நிறுவன வயம்ப வர்த்தக குழுவுடன் யாழ்ப்பாணம் வணிக கைத்தொழில் மன்றம் வர்த்தக புரிந்துணர்வு உடன்படிக்கையில் நேற்று வர்த்தக சங்க கேட்போர் கூடத்தில் கைச்சாத்திட்டது.

இதன்போதே இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இவ் ஒப்பந்தத்தின் மூலமாக யாழ்.மாவட்டத்தில் வியாபாரத் தொடர்புகளை ஏற்படுத்தல், தொழில்நுட்ப அறிவுகளை யாழ்ப்பாணக் கைத்தொழில் துறைக்கு வழங்குதல், தென்னிலங்கை வர்த்தகர்களுடன் வர்த்தக ரீதியான உறவுகளைப் பலப்படுத்தல் போன்றவை முக்கியத்துவம் பெறுகின்றது.

இதற்காக 61 பேர் கொண்ட வர்த்தகத் துறையினரும் முதலீட்டாளர்களையும் கொண்ட உயர் மட்டக் குழு நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாண வர்த்தக சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினர்.

இவர்கள் மத்தியில் வணிகர் சங்கத்தின் செயலாளர் இ.ஜெயசேகரன் உரையாற்றுகையில்;

யுத்தம் நடைபெறுவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் தென்னிலங்கையின் சந்தைகளில் பெரும் பங்கை வகித்து நிலை நிறுத்திக் கொண்டது.

குறிப்பாக கடலுணவுகள், விவசாயப் பொருள்கள், தொழிற்சாலை உற்பத்திகள் (சீமெந்து, உப்பு, சீற்) ஆகியன இலங்கையின் தேவையைப் பூர்த்தி செய்து பெரும் இடத்தைப் பிடித்திருந்தது.

துரதிர்ஷ்டவசமாக யுத்தம் இடம்பெற்ற போது யாழ்.மாவட்டத்தின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது யுத்தம் முடிபுற்றதாக அரசாங்கம் அறிவித்தபின் ஏ-9 பாதை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் திறக்கப்பட்டதன் பின்னர் கடலுணவுகள், விவசாயப் பொருள்கள் ஓரளவு தென்னிலங்கைக்கு அனுப்பப்படுகின்றது.

வட பகுதியிலிருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் லொறிகளில் மூன்றில் ஒரு பகுதி லொறிகளே இவ்வுற்பத்திப் பொருள்கள் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் லொறிகள் அனைத்திலும் பொருள்களை முழுமையாகக் கொண்டு செல்வதற்கு நிலையை ஏற்படுத்த வேண்டும்.

அத்துடன் வர்த்தக ரீதியில் பலம் படைத்த இங்கிருந்த வர்த்தகர்கள் கடந்த கால யுத்தத்தினால் இடம்பெயர்ந்து அகதிகளாகவும் நலன்புரி நிலையங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் மீள் குடியேறி பொருளாதாரத்தை வளப்படுத்த வேண்டும். பாரிய தொழிற்சாலைகள், சிறு கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் தலைத்தோங்கப் பட வேண்டும்.

வட பகுதி மக்கள் எதிர்பார்ப்பது நிரந்தர சமாதானத்தையும் நிலைத்து நிற்கும் பொருளாதாரத்தையுமே. தென்னிலங்கை வர்த்தகர்களாகிய நீங்கள் வட பகுதி மக்களினுடைய தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

அந்த வகையில் நாம் உங்களுடன் இணைந்து செயற்படத் தயாராகவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். இந் நிகழ்வில் குருநாகல் உதவி மேயர் அசோக அபேயசிங்க, வட மேல் மாகாண பிரதம செயலாளர் ஜே.எம்.ஜி.பி.ஜெயசுந்தர, ஜே.எஸ்.பி.நிறுவன இயக்குநர் நீலகாந்த, யாழ்.மாவட்ட வணிகர் சங்கத் தலைவர் இ.ஜெனக்குமாரன், கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் பூரணசந்திரன், வணிகர் சங்க உப தலைவர் இ.ஜெயசேகர ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-5)

# தமிழ் கூட்டமைப்பின் ஆதரவுடன் அரசியல் அமைப்பில் மாற்றம் தேவை

## அமைச்சர் டி.எம்.ஜெயரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் சமத்துவத்தையும் மதிப்பையும் வழங்க வேண்டும் எனில் புதிய அரசியல் அமைப்பும் புதிய சட்டங்களும் இலங்கைக்கு தேவை என்று தோட் டத் தொழில்துறை அமைச்சர் டி.எம். ஜெயரத் தின தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து கட்சிகளினதும் ஆதரவு உடனேயே அந்த அரசியல் அமைப்பு மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த 30 வருடங்களாக நாட்டில் பரவியிருந்த தீவிரவாதம் தற்போது தோற்கடிக்கப் பட்டு விட்டது. நாடு தற்போது அமைதியையும் ஒருங்கிணைவையும் கண்டுள்ளது. ஆனால் தமிழர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் தமது சுயமரியாதை, அதிகாரம், மனித உரிமைகள் உள்ளிட்ட உரிமைகள் அனைத்தும் இழக்கப் பட்டு விட்டதாக நம்புகின்றனர்.

அதனால் அனைவரையும் ஒரே மாதிரியாக நடத்தக்கூடிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவதன் மூலம் எல்லா மக்களுக் கும் ஏற்றபடி நாட்டின் சட்டங்கள் மாற்றப்பட வேண்டும்.

உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து தீவிரவாதம் மறைந்து போய் விட வில்லை. அதனால் அது மீண்டும் தலை தூக்குவதற்கான சாத்தியங்கள் இருக் கின்றன.

தமிழர்கள், தென்னிந்தியாவில் இருந்து வந்த தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர்கள், மலேயர்கள் என அனைவரையும் ஒரே விதமாக நடத்தும் சட்ட ஏற்பாடுகள் நிச்சயம் கொண்டு வரப்பட வேண்டும். அனைத்து மக்களும் சமத்துவத்துடன் நடத்தப்பட வேண்டும். இவ்வாறு அமை ச்சர் மேலும் கூறினார். (ச–5)

# கிலாறியின் குற்றச்சாட்டை அரசாங்கம் புறக்கணிப்பு

(நியூயோர்க்)

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் இலங்கையில் இடம் பெற்ற போரின் போது ஓர் ஆயுதமாக பயன்படுத்தப்பட்டது என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கிலாறி கிளின்ரன் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் தெரிவித்தார் எனக் கூறப் படுவதை இலங்கை அரசு புறக்கணித்து விட்டது. பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறையை தடுத்து நிறுத்து வதற்காக ஐ.நா. சிறப்பு பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டும் என பாதுகாப்பு சபையில் கடந்த புதன் கிழமை தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

ஆனால் கிலாறி கூறிய குற்றச்சாட்டை இலங்கை பேரிடர் நிவாரண மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் செயலாளர் ரஜீவ விஜயசிங்க நிராகரித்தார். எனது அறிவிற்கு எட்டியவரையில் அது பொய் அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஒன்றும் தெரிக்கப்பட்டதாக தனக்கு தெரியவில்லை என்றார் அவர்.

கிளின்டன் பொதுப்படையான அறிக்கை எதையாவது விடுத்திருப்பார். அமெரிக்க அரச த்லைவர் தேர்தல் வேட்பாளர் போட்டியின் போது ஓபாமாவிற்கு எதிரான பரப்புரையின் போதும் அவர் இப்படி பொதுப்படையாக கூறி யிருந் தார். ஓபாமாவின் புத்தகத்தில் அவற்றை நாங்கள் பார்த்த போதும் கிளின்டனை நாங்கள் மன்னித்து விட்டோம் என்றார் விஜயசிங்க. (ச–5)

# நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துக்கு 150 மில்லியன் பெறுமதியான படகு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பயணிகள் படகுச் சேவைக்கு என 150 மில்லியன் ரூபாய் பெறுமதியான புதிய படகொன்றை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை கொள்வனவு செய்கின்றது. இத்தகவலை யாழ்.வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நெடுந்தீவு பயணிகள் படகுச் சேவைக்கு என 150 மில்லியன் ரூபாய் பெறுமதியான புதிய படகு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கொள்வனவு செய்யப்படுகிறது.

இப் படகு குமுதினிப் படகு போன்று 100 பேர் பயணம் செய்யக்கூடியவாறு தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. இப்படகின் சேவைகள் இவ் வருட இறுதியில் ஆரம்பித்து வைக் கப்படும்.

இதேவேளை நெடுந்தீவில் 30 மில்லியன் ரூபாய் செலவில் புதிய இறங்கு துறை ஒன்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ளது என யாழ்.வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலா ளர் வி.சுதாகர் குறிப்பிட்டுள்ளார். (ச–5)

## தமிழ் மக்களின் தடுத்து வை...

குழுவின் விசாரணையில், அனைத்துலக விமர்சனக்குழுவைச் சேர்ந்த அன்ரூ ஸ்ரோல் கெய்ம், சுயாதீன ஊடக வியலாளரான சுனந்த தேசப்பிரிய, பெல்ஜியத்தில் உள்ள ஐ.நா.மனிதாா்ந்த விவகார அதிகாரி அன்ரோனியே கிராட், ஐரோப்பிய ஆணைக்குழுவைச் சேர்ந்தவர்களான டேவிட்டிர் மற்றும் ரோல்ப்டிம் மென்ஸ் ஆகியோரும் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் தமது சாட்சியங்களை அளித்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கை தூதுவர் ரவிநாத ஆரிய சிங்க குழு முன்னிலையில் தமது நாட்டின் நிலைப்பாடுகள் குறித்து விளக்கம் அளித்ததாக தூதரகம் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அப்போதே இடம் பெயர்ந்தோர் பிரச்சினையை அரசியல் ஆயுதமாக்க கூடாது என அவர் வலியுறுத்தினார். இடம் பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் குறித்து அக்கறை தெரிவிப்போர் அந்த பிரச்சினைகளை இலங்கை அரசு தீர்ப்பதற்கும் மக்களை மீளக்குடியமர்த்து வதற்கும் உதவிகளை செய்ய வேண்டும் எனவும் அவர் அப்போது தெரிவித்தார்.

அவர்கள் எங்கள் மக்கள். வெற்றிகரமாக அவர்களுக்கு அரசு உணவளித்து வருகின்றது. மருத்துவர் வசதிகளை வழங்குகின்றது கல்வி கிடைப்பதை உறுதிப்படுத்தி உள்ளது.

அவர்கள் பாதுகாப்பாக தமது இடங்களுக்கு திரும்பி செல்வதை நாம் உறுதிப்படுத்துவோம் யாரோ சொல்கிறார்கள் என்பதற்காக அன்றி எமது கடமை என்பதனால் அதனை நாங்கள் செய்வோம் இடம்பெயர்ந்த மக்களின் ஆறில் ஒரு பங்கினர் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குமாகாணத்தை சேர்ந்தவர்கள். அவர்கள் அந்தந்த பகுதிகளுக்கு திரும்பி அனுப்பப்பட்டுள்ளனர். மன்னார் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் இப்போது மீளக்குடியமர்த்தப்பட்டு வருகின்றார்கள். அத்துடன் முகாம்களில் உள்ளவர்களை பொறுப்பேற்றுக்கொள்ள விரும்பும் உறவினர்கள் அதற்கு விண்ணப் பிக்க முடியும் என்ற விளம்பர அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன என்று தூதுவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ச–5)

## டில்லியிலுள்ள இலங். தூதர...

ஆகிய அமைப்புக்களின் சார்பில் நேற்று டெல்லியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இவ் ஆர்ப்பாட்டத்திற்கு புதிய தமிழகம் கட்சித்தலைவர் டாக்டர் கிருஸ்ணசாமி தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தின் முடிவில் நாடாளுமன்ற சாலையிலிருந்து பிரதமர் அலுவலகம் நோக்கி ஊர்வலமாகச் செல்லமுயன்ற ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். அதன் பின்னர் புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள் சிலர் இலங்கைத் தூதரகம் அமைந்துள்ள கௌடியா மார்க் பகுதிக்குச் சென்று தூதரகத் துக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று விடுமுறை தினமாக இருந்ததால் பணியாளர்கள் யாரும் அங்கு இல்லாத நிலையில் பாதுகாப்பு வீரர்களை மீறி வளாகத்துக்குள் நுழைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் வளாகத்தின் முன்பகுதியில் வைக்கப்பட்டிருந்த பூந்தொட்டிகளை உடைத்து சேதப்படுத்தியதாகவும் அவர்களை பாதுகாப்பு அதிகாரிகள் அங்கிருந்து விரட்டி அடித்ததாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இலங்கை தூதரகத்தில் ஊடகத் தொடர்பு அதிகாரி குணரட்ண, அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்த எல்லோருக்கும் உரிமை உண்டு.

தூதரக வளாகத்துக்குள் புகுந்துவன்முறையில் ஈடுபடுவதை ஏற்க முடியாது. பூந்தொட்டிகள் தான் சேதப்படுத்தப்பட்டன. எனினும் சேதம் பெரியதா சிறியதா என்பதை விட தூதரக வளாகத்துக்குள் புகுந்து இவ்வாறான செயல்களில் ஈடுபடக் கூடாது. இது தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் கொடுத்து தூதரகத்தின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு கோரியுள்ளோம் என்று தெரிவித்துள்ளார். (ச–3,5,14)

## ஐ.நாவின் குற்ற...

சாதகமான அறிக்கை. இதனை நாங்கள் உரிய முறையில் கவனத்தில் எடுப்போம் எனவும் அமைச்சர் உறு தியளித்தார்.

போரின் காரணமாக இடம் பெயர்ந்த மக்களை ஜனவரி மாதத்துக்கு முன்னதாக மீளக் குடியமர்த்துவதாக அரசு உறுதியளித்திருக்கின்றது.

இருந்தபோதிலும் தமிழ் மக்களுடைய நலன்களைப் பாதுகாக்கும் விடயத்தில் இலங்கை அரசு தனது உறுதி மொழியை எந்தளவுக்குப் பாதுகாக்கும் என அனைத்துலக உதவி அமைப்புக்களும் மனித உரிமை அமைப்புகளும் கேள்வி எழுப்பியிருக்கின்றன. (ச–5)

## குருநாகலில் குண்டு வெடி...

குருநாகல் பகுதியில் நேற்று காலை இடம் பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இருவரே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 13 பேரில் பாடசாலை சிறுமியொருவர் உயிரிழந்துள்ளதுடன் வாகன சாரதியும் உயிரிழந் துள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுக் காலை குருநாகல் உடுவல்பொலவில் பாடசாலை மாணவர்களை ஏற்றச்சென்ற வான் ஒன்றில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் 8 சிறுவர்கள் உட்பட 13 பேர் காயமடைந் துள்ளனர். இதில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த 12 வயதான மாலியாதேவ பாலிகா வித்தியாலய மாணவி எரந்திகா திஸாநாயக்கவும் உயிரிழந்துள்ளதோடு, குறித்த பாடசாலை வான் சாரதியும் உயிரிழந் துள்ளார். ஏனையோர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்த குண்டு வெடிப்பு தொடர்பில் நேற்று இடம் பெற்ற பாதுகாப்பு குறித்து தெளிவுபடுத்தும் ஊடக மாநாட்டில் கருத்து தெரிவித்த இராணுவப் பேச்சாளர், தனிப்பட்ட விரோதம் காரணமாகவே இந்த சம் பவம் இடம் பெற்றுள்ளதாக குறிப்பிட்டார். குறித்த வான் சாரதி வானை இயக்க ஆரம் பித்ததும் வானில் பொருத்தப்பட்டிருந்த குண்டு வெடித்ததாகவும் இராணுவப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் குருநாகல் பொலிஸ் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்த அவர் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக கொழும்பிலிருந்து குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சென்றுள்ளதாக கூறினார். விசாரணைகளின் பின்னர் முழுமையான தகவல்கள் வெளியிடப்படும் எனவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார தெரிவித்துள்ளார். (ச–5)

## யாழ்ப்பாணக்...

3 இலட் சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்றினர்.

கிடைக்கப் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் 118 மாணவர்கள் சித்திபெற்றுள்ளனர். ஏனைய முன்னணிப் பாடசாலைகளின் பெறுபேறுகள் கிடைக்கப் பெறவில்லை.

இதேவேளை பெறுபேறுகளை பாடசாலைகளுக்கு அனுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது. (ச–3.5)

## வீட்டில் மீளக்கற்றதன் மூலம்...

ஸ்ரீகர்சன் தமது சாதனை குறித்து வலம்புரிக்கு தெரிவிக்கையில்,

பாடசாலையில் கற்பவற்றை தினமும் வீட்டில் மீளவும் கற்று புதியபுதிய வினாக் களுக்கு பதிலளிப்பேன்.

இதற்கு பெற்றோரின் உதவியைப் பெற்றுக்கொள்வேன். அத்துடன் தெரியாத சில வினாக்கள் இருப்பின் அவற்றை பாடசாலை ஆசிரியரிடமிருந்து விளக்கத்தைப் பெற்று இலகுவாகக் கற்றுவந்தேன்.

தனியார் கல்வி நிலையங்களுக்கோ, பிரத்தியேகமாக வேறு ஆசிரியர்களிடமோ கல்வி கற்பதில்லை.

எனது தந்தையார் பண்ணாகம் அ.மி.த.க. பாடசாலை ஆசிரியர் என்பதுடன் தாயார் தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலய ஆசிரியையாகவுள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சையை இலகுவாக எதிர் கொண்டதுடன் பரீட்சை முடிவடைந்ததும் வீட்டில் அதே வினாத்தாளை செய்துபார்த்த போது 192 புள்ளிகள் கிடைத்திருந்தது.

எனவே நான் 192 புள்ளிகளை எடுப்பேன் என உறுதியாக எதிர்பார்த்திருந்தேன். எனினும் அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தை பிடிப்பேன் என எதிர்பார்த்ததில்லை.

இப் பரீட்சையில் கூடிய புள்ளிகள் பெற்றுவிட்டேன் என்று எதிர்காலத்தில் வரவுள்ள பிரதான உயர்தரப்பரீட்சைகளை அசட்டையாக எதிர் கொள்ள மாட்டேன்.

இனிவரும் பரீட்சைகளே எனது வாழ்வுக்கு சவாலானது எனக் கொண்டு தைரியத்துடன் கல்வி கற்று எமது மாவட்ட மக்களுக்கு சிறந்த சேவையே வழங்கக் கூடிய வைத்திய நிபுணராக வருவேன் என உறுதியாகக் கூறுகின்றேன்.

குறிப்பாக எனது இந்த வெற்றிக்கு உறுதுணையாகவிருந்த பெற்றோர்கள் கல்வி கற்பதற்குரிய சகல வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுத்த யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன், ஆரம்பப்பிரிவு பொறுப்பாசிரியர் எஸ்.அதிசயதாஸன், சிறந்த வழிகாட்டியாக என்னை நம்பிக்கையுடன் வளர்தெடுத்த வகுப்பாசிரியை திருமதி ஜே.ஜெயரட்ணராஜா மற்றும் எமது கல்லூரி ஆசிரியர்கள், சக நண்பர்களுக்கு நன்றியை கூறுகின்றேன். (ச–5)

## தீவுப்பகுதியை...

இதேவேளை வேலணை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 338 பேரும் நெடுந்தீவைச் சேர்ந்த 18 பேரும் வேலணை மத்திய கல்லூரியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இன்று அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

தீவுப்பகுதியைச் சேர்ந்த மேலும் ஒரு தொகுதியினர் நாளை யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவரப்படவுள்ளனர். (ச–246)


ஆங்கில மற்றும் தகவல் தொழில்நுட்ப வருடம் 2009

"சமகால தகவல் தொழில்நுட்ப உலகுடன் நீங்களும் இணையுங்கள்"



- மாணவர்கள் (Grade 10, ICT, GIT)
- உயர் கற்கை நெறி மாணவர்கள்
- உத்தியோகத்தர்கள்
- தகவல் தொழிநுட்ப ஆர்வலர்கள்
- போட்டிப் பரீட்சைகளுக்கு தோற்றுபவர்களுக்கான

இவ் வருடத்தின் மிகப் பிரமாண்டமான நிகழ்வு

விரைவில் எதிர்பாருங்கள்

இலங்கையின் முதற்தர "சமகால தகவல் தொழில்நுட்ப நூல் வெளியீடும், தகவல் தொழிநுட்ப கருத்தரங்கும்".


இப்பத்திரிகை வலம்புரி அன்,கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.10.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.